www.padippakam.com

Nr 268
CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

# காகம்

Kakam



..........................காலையில் கதிரவன்
கண் முழிக்கின்றான் - ஆனால்
என்மனதில்
....................................திருப்தியில்லை

3 Marts 95

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# காகம்

"முற்றமெல்லாம் புழுங்கல்- அதனால்

நம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்."

- ஒரு தாய்

முகம்

## திருப்புதல்

தற்போதய நிலையில் ஐரோப்பாபோன்று ஈழத்தமிழ்அகதிகளுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த அகதித்தஞ்சம் வழங்கி வந்த மேற்குலகநாடுகள் பலவும் ஈழத்தமிழர்களை வேண்டாத விருந்தாளிகளாகப் பார்க்கும் நிலை தோற்றம்கொண்டு சில ஆண்டுகளாகிவிட்டது.

*1983* களின்பின்னர் அனுதாபஅலை ஒன்றை மேற்குலக நாடுகளில் ஏற்படுத்தித்தந்த *83*ன் யூலைக்கலவரத்தைத்தொடர்ந்து அரசியல்ரீதியாக தமிழர்களது இனஒடுக்கலுக்கெதிரான பிரச்சாரத்திற்கும் அக்காலம் நல்ல வாய்ப்பாகவும் அமைந்ததெனலாம்.
இந்த குறுகிய ஒரு தசாப்தகாலஇடைவெளிக்குள் ஈழத்தமிழர்களுக்கெதிரான இந்தக்கதவடைப்புக்கான காரணங்கள் என்ன?
இன்று நோர்வே, சுவிற்சிலாந்து, சுவீடன் அதைப்பின்பற்றி டென்மார்க் என்று பல நாடுகளும் ஈழத்தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான முன்முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதற்கான காரணங்களை நாம் கண்டறிதல்வேண்டும்.
வெளிப்படையாக இந்நாட்டரசுகள் "பிரச்சனை முடிந்து விட்டது" என்று வெகுசனத்தொடர்பு



படிப்பகம்

www.padippakam.com

சாதனங்கள் வாயிலாக அறிவித்திருப்பதனை விடுத்து இக்காரணமன்றியும் அவர்கள் கூறத்தயங்குகின்றதோ அல்லது கூறாது நாகரிகமாக தவிர்க்கின்ற காரணங்கள் என்ன? என்பதனை நாம் ஒவ்வொருவரும் கண்டறிதல் வேண்டும்.

பொருளாதாரக் காரணங்களுக்காகவே ஈழத்தமிழர்கள் இடம்பெயர்கின்றார்கள் என்ற அபிப்பிராயமும், அவ்வவ்நாட்டு அகதிகள் தொடர்பான ஆய்வுநிறுவனங்களால் சேகரித்து தொகுத்துவைக்கப்பட்டுள்ள தமிழர்கள் தொடர்பான சமூககுற்றவிரோதச் செயல்கள் போன்றனவும் அவர்கள் கூறாது விட்டிருக்கின்ற காரணங்களாக நாம் ஏன் எண்ணிப்பார்க்கக்கூடாது.

எமது ஈழத்துச் சகோதரர்கள் நலன் கருதியும் எமது தேசத்தின் எதிர்கால நலன்கருதியும் ஏற்கனவே இங்கு வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் நடந்துகொண்டிருக்கிறோமா? என்ற வினாவை நாம் ஒவ்வொருவரும் கேட்டுப்பார்ப்போமானால் ஆளை ஆள் பார்த்து முழிபிதுங்கவேண்டிய நிலையிலேயே நாம் இருக்கின்றோம் என்ற உண்மை புலப்படும். அதைவிடவும் இப்போது இங்கு எழுதமுடியாத இன்னும்பல காரணங்களும் உண்டு.

"தமிழர்கள் சிறந்த நாகரிகம் ஒன்றைக் கொண்டிருந்தனர் " என்ற இறந்தகால சொற்பதம் ஒன்றுமட்டும் தமிழினத்தை வாழவைக்காது. மாறாக

தமிழர்கள் நாம் ஒரு சிறந்த நாகரிகம் ஒன்றை கொண்டிருக்கின்றோம் என்ற நிகழ்கால யதார்த்தம் ஒன்றுதான் எமக்கும் எமது தேசத்திற்கும் பயன்பாடுடையதாகும்.

இன்று எமது ஈழத்தமிழர்கள் நாடுகடத்தப்படுகின்றார்கள் என கூட்டம்சேர்க்காமல் இன்று ஒவ்வொருவரும் ;இத்தகைய நிகழ்வுகளுக்கு ஏதோ ஒருவகையில் நாமும் காரணமானவர்கள் என்பதை அறிய முயல்வோம். அது போதும். ■

உள்ளே.................


| பக்கம் | விடையம் |
|---|---|
| 3 | முகம் |
| 5 | H.C.Andersen கதை |
| 8 | இளைஞர் பக்கம் |
| 10 | மனதோடு பேசுதல் |
| 12 | மலர்தல் வாடல் தெரிதல் |
| 15 | கிணறு |
| 18 | மேலைத்தேய சுதந்திர......... |
| 22 | ஆதவனின் பார்வை..... |
| 25 | ஜெனிவாவில் நான் |
| 26 | கவிதைகள் |
| 27 | தோப்புக்கரணங்கள் |
| 30 | பொதுவிபரங்கள் |


சந்தாதாரர்களுக்கு.........

இதுவரை காகத்திற்கான சந்தாவை செலுத்தாதவர்கள் தயவுசெய்து அதனைச் செலுத்தி; காகத்தின் வளர்ச்சிக்கு உதவுங்கள். நன்றி!



படிப்பகம்

www.padippakam.com

# H.C.ANDERSENனின் கதை

தமிழில்: திரு. சி.கருணாகரன்

## இரண்டு Claus கள்.........................

ஒரு நகரில் இரண்டு மனிதர்கள் . இவர்களின் பெயர்கள் ஒன்றாக இருந்தன. இவர்களில் 4 குதிரைகள் வைத்திருந்தவரை பெரிய கிளவ்ஸ் என்றும் ஒரு குதிரை வைத்திருந்தவரை சின்ன கிளவ்ஸ் என்றும் அழைப்பதன்மூலம் அவர்களை இனம்கண்டு கொண்டனர். இவர்கள் இருவரும் எப்படி இருந்தார்கள் என பார்ப்போம். ஏனெனில் இது ஒரு உண்மைக்கதை.

வாரம்பூராவும் சின்ன கிளவுஸ் தனது ஒரு குதிரையுடன் பெரியகிளவ்ஸின் நான்கு குதிரை களையும்சேர்த்து பெரியகிளவ்ஸின்தோட்டத் தை உழுதல்வேண்டும். பெரியகிளவ்ஸ் தனது நான்கு குதிரைகளையும் கொடுத்து வாரத்தில் ஒருநாள்மட்டும் உதவிசெய்வான்.

ஒரு ஞாயிறு அன்று சின்னக்கிளவ்ஸ் ஐந்து குதிரைகளையும் தன்னுடைய குதிரைகளைப் போல் அதட்டி, சவுக்கால் அடித்து குதிரைகள் மூலம் உழுதுகொண்டிருந்தான்.சூரியன் அழகாக உதித்திருந்த அந்நேரம் தேவாலயமணியும் ஒலித்தவண்ணமிருந்தது. மக்கள் எல்லோரும் அழகாக உடுத்து கையில் சல்மா புத்தகத்துடன் பாதிரியாரின் பிரசங்கத்தை செவிமடுப்பதற்காக விரைந்துகொண்டிருந் தனர்.இதனைக்கண்ட சின்னக்கிளவ்ஸ் குதிரைகளை ஒருமுறை அதட்டி உவுக்கையும் வீசி "இவையெல்லாம் என்குதிரைகளே " எனச்சத்தமிட்டான்."நீ அப்ப டிக்கூறாதே. இதில் ஒன்றுமட்டுமே உன்னது என்று பெரியகிளவஸ் கூறினான்.மீண்டும் தேவாலயத்தை நோக்கி செல்பவர்களைக்கண்ட சின்னக்கிளவ்ஸ் தன்னைமறந்து "இவை எல்லாம் என்னுடைய குதரைகளே " என்று சத்தமிட்டான். "இப்படி மீண்டும் ஒருமுறை நீ கூறினால் உனது குதிரையின் மண்டையில் அடித்து அதைக்கொன்றுவிடுவேன் "என்று பெரிய கிளவ்ஸ் கூறினான். "இனி ஒருதடவை நான் அவ்வாறு கூறமாட்டேன்" என்று சின்னகிளவ்ஸ் கூறினான்.

அவ்வழியால் சென்றுகொண்டிருந்தவர்கள் சின்னக்கிளவ்ஸைக்கண்டு அவரை நலம்விசாரி த்துவிட்டுச்செல்லும்போது "இவனிடம் ஐந்து குதிரைகள் இருக்கின்றன." என்று



*Andersen Hans Christian, (2.4.1805-4.8.1875 ) ஐரோப்பிய இலக்கிய உலகில் 1800 களின் தலைசிறந்த கவிஞராக ஏற்றுக்கொள்ளப்பட்டவர். கவிதைகள், கற்பனைக்கதைகள், கதைகள்,பயணஅனுபவங்கள், வாழ்க்கைக்குறிப்புகள், என தனது இலக்கியங்கள் மூலமாக எழுத்துலகில்பிரகாசித்தவர். பிறப்பால் இவர் ஒரு டனிஸ் சமூகத்தவராக இருந்தாலும்: இவரது படைப்புக்கள் உலகின்125மொழிகளில்மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.தமிழில்......?*



படிப்பகம்

www.padippakam.com

பெருமிதத்துடன் பேசிக்கொண்டு போகவும் தன்னைமறந்த அவன் மீண்டும் "இவை யாவும் என்னுடைய குதிரைகளே " என்று சத்தமிட்டான். இதைக்கேட்டு கோபமடைந்த பெரியகிளவ்ஸ் மண்வெட்டியை எடுத்து சின்னக்கிளவ்ஸின் குதிரையை மண்டையில் அடிக்க; குதிரை அவ்விடத்திலேயே இறந்துபோனது.

"ஓ! இப்போது என்னிடம் ஒருகுதிரையும் இல்லை" என்று சின்னக்கிளவ்ஸ் அழுதபடி கூறினான். பின்னர் அக்குதிரையின்தோலை உலரவைத்து எடுத்து விற்ப்பதற்காக நகரத்திற்கு எடுத்துச்சென்றான். சந்தைக்குப்போகும் வழி தூரமாக இருந்ததுடன் அவனொரு இருண்ட காட்டுவழியாக போகவேண்டியும் இருந்தது. அக்காட்டை கடக்கும்வரை அவ்வழி குளிரானதாகவும் கடினமானதாகவும் இருந்தது.அக்காட்டை கடந்து நகரைச்சென்றடைவதானால் இரவு ஆகிவிடும். பதிலாக மீண்டும் திரும்பி வீட்டுக்குப்போவதென்றாலும் நள்ளிரவாகிவிடும். அவ்வழியின் ஓரமாக இருந்த ஒரு விவசாயியின் வீட்டுக்கதவில் தட்டினான். விவசாயியின் மனைவிவீட்டுக்கதவைத்திறந்தாள். அவன் தமதுவீட்டில் தங்குவதற்கு வந்திருக்கிறான் என்பதனை அறிந்து தன் கணவன்வீட்டில் இல்லை என்றும் தனக்கு அறிமுகமற்றவர்களை தான் வீட்டிற்குள் அனுமதிப்பதில்லை என்றும் ஆகவே அவனைப்போகும்படியும்கூறி கதவைப்பூட்டிக்கொண்டுவிட்டாள். அங்கு பெரிதாக குவிக்கப்பட்டிருந்த வைக்கற்போருக்கும் வீட்டுக்குமிடையில் இருந்த ஒரு குடிலில் படுத்துக்கொண்டான் சின்னக்கிளவ்ஸ்.

அக்குடிலின் கூரையில் ஒரு நாரை கூடுகட்டி தன்குஞ்சுகளுடன் வாழ்ந்துவந்தது. தான்படுத்திருக்கும்போது அந்தநாரை தன்கால்களை கொத்திவிடுமோ என்று அவன் அஞ்சினான்.அங்கு இருந்த கட்டிலில் படுத்த அவன் ஒருதடவை உருண்டு கட்டிலை சரிப்படுத்திக்கொண்டான். அப்போது சரியாக பூட்டப்படாத விவசாயி வீட்டு ஜன்னல்வழியாக வீட்டினுள் நடப்பதை அவனால் பார்க்கக்கூடியதாக இருந்தது. வீட்டினுள் சாப்பாட்டுமேசை அழகாக அலங்கரிக்கப்பட்டு; பழரசத்துடன் சுவையான உணவுகளுடன் விவசாயியின் மனைவியும் அவள்எதிரே அக்கிராமத்து ஆசிரியரும் அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். "இவர்கள் எவரையாவது போசனத்துக்கு அழைக்கலாமே" என்று அவன் தனக்குள் ஒருதடவை வருந்திக்கொண்டு ஜன்னல்வழியே நோக்கிக்கொண்டிருந்தான். அங்கிருந்த கேக்கினைக்கண்டு "எவ்வளவு சுவையாக அது இருக்கும் ?"என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டான்.

அப்போது அவ்வீட்டைநோக்கி எவரோ குதிரையில் வரும் ஒலியை அவனால் கேட்கக்கூடியதாக இருந்தது."அது அந்தவீட்டு விவசாயியாகத்தான் இருக்குவேண்டும்" என எண்ணிக்கொண்டான்.அந்த விவசாயி மிகவும் நல்லவர்.ஆனால் அவருக்கு அந்த கிராமஆசிரியரை கண்டால் கட்டோடு பிடிக்காது. ஆசியயரின் கண்களைக்கண்டாலே அந்தவிவசாயியிற்கு கோபம் வந்துவிடும்.இதை அறிந்திருந்த காரணத்தினாலேயே விவசாயி இல்லாத சந்தர்ப்பத்தில் அந்த ஆசிரியர் விவசாயியின் மனைவியினது சுகநலன்களை விசாரிக்க அங்கு சென்றிருந்தார். இவ்வாறு வருகைதந்திருந்த ஆசிரியருக்கு அவள் நல்ல சுவையான உணவு சமைத்து பரிமாறிக்கொண்டிருக்கும்போது கணவன் வருவதை அறிந்துகொண்ட அவள் ஆசிரியரை மூலையில் இருக்கும் இரும்புப்பெட்டிக்குள் மறைந்திருக்கும்படி கேட்டுக்கொண்டாள்.

பின்பு விவசாயியின் மனைவி பழரசத்தையும், உணவையும் விரைந்து மின் அடுப்பினுள் மறைத்துவைத்தாள்.

விவசாயி இதைப்பார்த்தால் ஏதாவது கேட்கமுற்படலாம் என்று அஞ்சினாள். சாப்பாடும் மறையவே பார்த்துக்கொண்டிருந்த சின்னக்கிளவ்ஸ் தன்னுடைய விளக்குகளையும் அணைத்தான்.

"அங்கே இருப்பது யார் "என்று விவசாயி சின்னக்கிளவ்ஸ் இருக்கும் இடத்தைநோக்கி



படிப்பகம்

www.padippakam.com

கூச்சலிட்டார்."ஏன் அங்கே படுத்திருக்கிறாய்? வீட்டிற்குள் வா!" என்றும்கூறினார் விவசாயி. சின்னக்கிளவ்ஸ் தன்னுடைய கதையைக்கூற........

"உள்ளே வா! நாங்கள் இப்போது சாப்பிடலாம் "எனக்கூறி அழைத்தார் விவசாயி.விவசாயியின் மனைவி இருவரையும் அன்புடன் வரவேற்று மேசையில் அமர்த்தி பெரியபாத்திருத்தில் கஞ்சியை பரிமாறினாள்.விவசாயி மிகவும் பசியுடன் வந்ததன் காரணமாக வயிறார கஞ்சியை அருந்தினார்.ஆனால் சின்னக்கிளவ்சிற்கு மின் அடுப்பினுள் மறைத்து வைக்கப்பட்டுள்ள அந்த சுவையான உணவுகளை எண்ணிக்கொண்டிருந்ததால் அதிகளவு சாப்பிடமுடியவில்லை.

வீட்டிலிருந்து விற்பதற்காக எடுத்துவந்திருந்த குதிரைத்தோல் வைத்திருந்த பையை தனது கால்களுக்கிடையில் வைத்திருந்த சின்னக்கிளவுஸ் உணவில் சுவாரசியம் இல்லாததால் தோலினை கால்களால்மிதித்து விளையாடிக்கொண்டிருந்தான்.நன்றாக காய்ந்திருந்தஅந்ததோல் பெரிதாக சத்ததமிட "என்ன அது" என்று பண்ணையார் விசாரித்தார்.மீண்டும் சின்னக்கிளவ்ஸ் தன்னுடைய பையினை முன்னரைவிட பெரிதாக சப்தமிடும்படி செய்தான்."உன்னுடைய பையினுள் என்னவைத்திருக்கிறாய் ? என்று விவசாயி வினவ...."ஓ! இது ஒரு மந்திரவாதி, அவன்கூறுகிறான். "இந்தக்கஞ்சியை குடிக்கவேண்டாமாம். மின்அடுப்பு நிறைய அதிசயங்கள் காத்திருக்கின்றன என்றும்கூறுகின்றான்." என்று சின்னக்கிளவ்ஸ் கூறினான்.

"என்ன சொல்கிறாய்" என்று விவசாயி கேட்டார்.

மேலும் விரைவாக மின்னடுப்பை திறக்கும்படி விவசாயி உத்தரவிட்டார். அங்கு விவசாயியின் மனைவியினால் தயாரிக்கப்பட்ட சுவையான உணவுகள் காணப்பட்டன. "இவை இந்த மந்திரவாதியின் விளையாட்டுக்களே " என்று விவசாயி எண்ணினார். விவசாயியின் மனைவி எதுவும் கூறமுடியாமல்அச்சத்துடன் சாப்பாடுகளை எடுத்துவைத்தார். அவர்கள் உணவை ருசித்துச் சாப்பிட்டனர். சின்னக்கிளவ்ஸ் மீண்டும் தனது பையினை சத்தமிட வைத்தான்.

"இப்போது என்ன சொல்லுகிறான்" என்று வினவினார் விவசாயி.

அவன் சொல்கிறான்"மூன்று போத்தல் பழரசம் மின்னடுப்பினுள் இருக்கிறதாம்:" என்றான் சின்னக்கிளவ்ஸ். தான் ஒளித்துவைத்த பழரசங்களை விவசாயியின் மனைவி மேசையில் வைத்தாள். விவசாயி நிறையக்குடித்து சந்தோசமடைந்தார். சின்னக்கிளவ்ஸிடம் இருக்கும் இந்த மந்திரவாதிபோல் தானும் ஒரு மந்திரவாதியை பெற்றுக்கொள்ளவேண்டும் என விவசாயி விரும்பினார்.

"நான் மிகவும் சந்தோசமாக இருக்கிறேன். இந்தநேரத்தில் உனது மந்திரவாதியால் எனமுன் ஒரு பிசாசைக்கொண்டுவரமுடியுமா?" என விவசாயி வினவினார்.

"ஆம் என்னுடைய மந்திரவாதியால் நான்கேட்பதெல்லாம் செய்யமுடியும்" என்று கூறிய சின்னக்கிளவ்ஸ் தனது பையைச்சத்தமிடச்செய்து" பார்த்தாயா அவன் ஆம் என்று கூறுகின்றான் என்றும்கூறினான்.மேலும் அந்தப்பிசாசு பார்ப்பதற்கு அருவருப்பாக இருக்கும் என்றும் அதனைப்பார்ப்பதில் பயனேதும் இல்லை என்றும் தொடர்ந்து கூறினான்.

"நான் எதற்கும் பயப்படவில்லை அது எத்தகைய உருவத்தை கொண்டிருக்கும் ?" அது சரியாக உங்கள் ஊர் ஆசிரியரைப்போன்றிருக்கும் என்று சின்னக்கிளவ்ஸ் கூறினான்.



(அடுத்தஇதழில் முடியும்)



படிப்பகம்

www.padippakam.com





## வீடும் வெளியும்

இதோ! ஒரு இளைஞன் மனதில் ஆழமான ஆசைகளுடனும் கையிற்தூரிகையுடனும் ஏதோசொல்லவருகிறான்.

பெயர்:**உதயகுமார்.**
டென்மார்க்கில் கொற்றபுரோ எனும் நகரத்தில் வசித்துவரும் இந்த இளைஞன் ஓவியக்கலையில் ஈடுபாடுள்ளவன்.
கடந்த 03.02.95ல் முதன்முதலாக தனது ஓவியக்கண்காட்சி ஒன்றின்மூலம் முதன்முதல் வெளியே வருகிறான். ஆனால் ஏலவே பல ஓவியங்களை விற்றுமிருக்கிறான்.

இவனுடைய ஆசை என்னவென்றால் டென்மார்க்கிலுள்ள அனைத்து ஓவியர்களையும் இணைத்து ஒரு ஓவியக்கண்காட்சி ஒன்றைச்செய்வதன்மூலம் ;ஈழத்திலிருந்து இடம்பெயர்ந்த ஒட்டுப்பரம்பரை இன்னமும் தன் தாயக உணர்வுடனேயே வாழ்கிறது என்பதனை அனைவருக்கும் தெரிவிக்கவேண்டி நிற்கின்றான்.
இவனது ஆசையை நாம் நிராகரிக்கமுடியாது. ஆதலால் இவனைப்போன்ற ஆர்வமுள்ள இளம் ஓவியர்கள் காகத்தோடு தொடர்புகொள்ளுங்கள். குறைந்தபட்சம் 10 இளம் ஓவியர்கள் ஒன்றுசேரும்போது ஒரு கண்காட்ச்சிக்கான ஒழுங்குகளை காகம் பொறுப்பேற்று நடாத்தும். இவனையும், இவனது ஓவியங்களையும் பார்க்கவேண்டும்போலுள்ளதல்லவா.
காகத்தின் முன் அட்டைப்படத்தை பாருங்கள். அது அவனேதான் வடிவமைத்து கவிதையும் எழுதியிருக்கின்றான்.( ஆர்வமுள்ள இளம் கலைஞர்கள் காகத்தோடு தொடர்பு கொள்க.)....................ஆசிரியர்........காகம்.

நாங்கள் அகதிகளாக வேறுநாட்டில் வாழ்ந்தாலும் எங்கள் கலாச்சாரம் பண்பாடுகளைப்பின்பற்றியே வாழ்கிறோம். இதை நினைத்தால் மிகவும் சந்தோசமாக இருக்கின்றது.
வீட்டில் இருக்கும்போது தமிழ்மொழியிலேயே பேசுவேன். இவ்விதம் செய்வது ஒரு இனிமையானசெயல் என எனக்குத்தோன்றுகின்றது.அப்பொழுதுதான் நாம் தமிழையும் மறக்கமாட்டோம்,அத்துடன் எமது சகோதரர்களுடனும் கதைத்துப்பழகி அவர்களுக்கும் தமிழில் ஆர்வம்கூட்டக்கூடியதாக உள்ளது.
நிறையப்பிள்ளைகள் இந்நாட்டில் பிறந்திருக்கின்றார்கள். அவர்களிற்கும் நாம் தமிழ்மொழியை கற்பிக்கவேண்டும். இது எங்களுடைய கடமை. நான் நூலகத்தில் தமிழ்ப்புத்தகங்கள் எடுக்கும்போது ஒருவர் என்னைக்கேட்டார். வீட்டில் நான் என்னமொழியில் பேசுகின்றேன் என்று.அப்பொழுது நான்கூறினேன்"தமிழில்தான் நான் வீட்டில்பேசுகின்றேன்" என்று. உடனே அவர் கூறினார் "எங்கள் நாட்டில் வசித்துக்கொண்டு உங்கள்மொழியிலேயே பேசுகின்றீர்களே இது சரியானமுறையா" என்று.



படிப்பகம்

www.padippakam.com

அதற்கு நான் கூறினேன் "இங்கு இருக்குமட்டும் டெனிஸ்மொழியில் கதைப்போம். ஆனால் நாம் சிறிதுநேரமாவது நமது மொழியில் கதைக்காவிட்டால் நமது மொழியை மறந்து விடுவோம். நாங்கள் நாடு திரும்பும்போது எங்கள் மொழியையே கதைக்கவேண்டும். அத்துடன் இலங்கையில் வசிப்போருக்கு டனிஸ் தெரியாது" என்று கூறினேன். அதற்கு அவர்கூறினார் "நான் சொல்வது சரி" என்று. சிலவேளைகளில் நான் வெளியில் இருக்கும் பொழுதுஎனக்குச்சில விசயங்கள் பிடிக்காமல் இருக்கின்றது.உ.ம்: பாடசாலையில் சில தமிழ்ப்பிள்ளைகள் எங்கள் தாய்மொழியில் சில கூடாத வார்த்தைகளை டெனிஸ் பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுப்பார்கள். அப்பிள்ளைகள் அதை கேட்டுவைத்துவிட்டு வேறு தமிழ்ப்பிள்ளைகள் வரும்போது அதை சொல்வார்கள். இதைக்கேட்கும்போது மனதில் கஸ்டமாக இருக்கின்றது.

சில டெனிஸ்காரர்கள் பேசுவார்கள் "எப்பொழுது உங்கள் நாட்டிற்கு திரும்பிப்போவீர்கள் கறுத்தப்பண்டிகளே" என்று.

உடனே நாம் அவர்களிற்கு நடுவிரல் அடித்துக் காட்டுவதோ அல்லது டொம் (விசரன்) என்று சொல்வதோ கூடாது. நாங்கள்தான் விட்டுக்கொடுத்து போகவேண்டும்.அத்துடன் நாம் இந்நாட்டு சொந்தக்காரர்களல்ல. இந்நாட்டு **அகதிகள் என்பதை மனதில் வைத்திருக்க வேண்டும்.**

நாம் தமிழர்கள்!

நாம் நல்லவர்கள்!

நமக்கு விட்டுக்கொடுக்கும் பழக்கம் உண்டு.!

எழுதியவர்: **மேனகா தனபாலசிங்கம்.**

டென்மார்க்

.....அடுத்தஇதழில் இன்னொரு இளைஞர்........

**எனது நினைவில்**

**எனது கிராமம்............தி. சி.வாணி**

வேலணை எனது கிராமம்.

நான் எனது கிராமத்தைவிட்டு வெளிநாடுவரும் போது எனது வயது ஏழு. ஆனால் எனது நினைவில் எனது கிராமத்தில் அன்று கண்ட பல காட்சிகள் இன்னும் அழியாமல் உள்ளது. பசுமையான புல்வெளிகளும், வடலி, பனைமரங்களும், ஊரின் நடுவிலுள்ள பெருங்குளம் முத்துமாரியம்மன் கோவிலும், இருமடங்களும்; அருகிலுள்ள பெருங்குளமும், தென்னந்தோப்புகளும், வேலணை மகாவித்தியாலயமும் எனது ஊரின் சில சிறப்புக்களாகும்.

நான் எனது சிறுவயதுத்தோழி கோமளாவுடன் ஆடிப்பாடிய நாட்கள், களவாய் மாங்காய் பறித்து தின்று அம்மாவிடம் அடிவாங்கிய நாட்கள். ஆலமரத்தின்கீழ் அமர்ந்து பாடம்படித்த நினைவுகளும், வேப்பமரத்தில் ஊஞ்சல் ஆடிய நாட்களும் எனது நெஞ்சைவிட்டு அழியாதவை.

நான் ஆசையாய் வளர்த்த எனது நாயின் சாவு எனது ஏழுவயது வாழ்க்கையில் பெரும்துயரத்தை உண்டாக்கிய நாளாகும்.

பறவைபோல எனது கிராமத்தை சுற்றிவந்த எனது வாழ்க்கையை மாறியதற்கு யார் காரணம்?

நான் அன்று கண்ட எனது கிராமத்தை மீண்டும் காண்பேனா?

இக்கேள்விகள் நான் இன்று எனக்குள் கேட்கும் கேள்விகளாகும்.

இதற்கு விடை யார் கூறுவார்?



படிப்பகம்


www.padippakam.com

## மனதோடு பேசுதல் (தொடர்: 3)

செல்வன்

நினைத்துப் பார்க்கவே
இயலாமல் இருக்கின்றது.

நெருப்பெனப் பரவும்
நினைவுகளால்
நெஞ்சமெல்லாம் எரிந்து கொண்டிருக்கிறது



சொந்த மண்ணில்
சோகங்களே
எங்கள் சொந்தங்கள் ஆனது.

சொப்பனங்களிலும்
அகதிகளாக அலைவது
எங்கள் தலைவிதி ஆனது

இலட்சியங்களும்
இலட்சியத்தனங்களும்
கடல் கடக்கும் போதே
பிரியாவிடை பெற்று சென்று விட்டன.

இன்று
அகதி ஆதல்– என்பதே
இலட்சியம் போன்ற போர்வையுடன்.....

எவரை என்று நோக
எங்கு சென்று ஆற
ஏதோ
இந்த மூலைவரை வந்தாயிற்று.

மேலே
அந்த செஞ்சிலுவைக்கொடி
காற்றின் போக்கில்
பறந்து கொண்டிருக்கின்றது.

கீழே
எந்தன் வாழ்வு
ஆடை அவிழ்த்து
அனாதரவாய் வீழ்ந்து கிடக்கிறது.

அங்கு என்றும்
இங்கு என்றும்
இடம் மீதி இல்லாமல்
எல்லா இடமும் இரந்து பார்த்தாகிவிட்டது

எங்கு சென்றாலும்
ஏமாற்றங்களும் நிராகரிப்புகளும்
முன்னராகவே வந்து
எனக்காக காத்திருக்கின்றன.

நம்பிக்கை
தன் சுவடுகளை எல்லாம்
அடியோடு அழித்து விட்டு
தலைமறைவாகி இருக்கிறது.

காட்டில் எறிக்கின்ற நிலவாய்
நகரும் நாட்களும்
நிர்ப்பந்தமான ஒரு நிபந்தனையாய்
காத்திருப்புக்களும்
வீடுகதையாக அதுவும் தொடர்கதையாக...

எப்பொழுதாவது வரும் கடிதங்கள்
எப்போதும் எழும் கற்பனைகள்
இவற்றிலேயே
நகர்ந்து செல்லும் எந்தன்
குடும்பக்கப்பல்......

பொறுமை
பொறுத்துப் பொறுத்து
பொறுக்க முடியாமல்



படிப்பகம்

www.padippakam.com

வெறுப்புடன்
வெளிநடப்பு செய்திருக்கிறது.

இரு கரங்களையும்
கட்டிப்போட்டு விட்டு
காலம்
தனது வீரப்பிரதாபங்களை
விலாவாரியாக விளக்கிக்கொண்டிருக்கிறது

போதாதற்கு
யுகங்களையே
தம்முதுகில் சுமந்து வருவதாய்
பாவனை பண்ணும் இந்தக் கணங்கள்....

அவற்றை
விரட்ட நிகழும் போராட்டத்திலேயே
என் உயிர் மெழுகு
உருகிப்போய்விடும் போலிருக்கிறது.

பின்னர் என்ன?
இலைகளை உதிர்த்து விட்டு
ஏங்கும் மரங்களையும்
பின் அவை முகமலர்ந்து
துளிர்கள் விட்டு மகிழ்வதனையும்
இந்த ஜன்னல் வழியால்– இன்னும்
எவ்வளவு காலத்திற்கு பார்த்திருப்பது?

பாழுங் கிணற்றில்
வீழ்ந்து கொண்டிருக்கும் நான்
நம்பிக்கைகள் பற்றி
வர்ணித்து வர்ணித்து – இன்னும்
எத்தனை கடிதங்களில்
கதை புனைந்து கொண்டிருப்பது?

கண்ணிமைகளை இமைப்பதற்கும்
எவர் எவரினதோ
கண் அசைவுகட்காய் காத்திருக்கும்
இன்றைய சாபங்கள்– இன்னும்
எத்தனை எத்தனை யுகங்களுக்கு?

என் சந்தோசங்களை
அடக்கம் செய்துவிட்டு
அவை மீண்டும் உயிர்த்தெழுந்திடாமல்
சமாதி மேல் நின்று
தனிமை காவல் காக்கின்றது.

(இன்னும் வரும்)

# நீதி எங்கே? தர்மம் எங்கே?

பொன்னண்ணா

உலகம் எல்லாம் குண்டொலி
உயிர்கள் எல்லாம் அதற்குப்பலி
மழைக்கால வீட்டிலைப் போல்
மக்கள் நெஞ்சத்தில் வாழ்க்கைநிலை.

பசிப்பிணியால் சாவோர் கோடி....
நோய்ப்பிணியில் சாவோர்
அதனிலும்கோடி
உடையில்லா மக்கள் மூலையிலே.....
உயிரில்லா உடல்கள்பல வீதியிலே......

திக்கெட்டும் திரைச் செய்தி......
திகைப்பூட்டும் இச் செய்திகளே......
உலகப் பெரும் நாடுகளும்.....
உருக்கமுடன் இவைபற்றிக் கூட்டங்கள்.

சங்கக்கடை கூட்டம் போல..
சரக்குப்பற்றியதே இவர்கள் பேச்சு
அகதிக்கு உடை, உணவு, மருந்து
அவர்கள் இருக்க வசதி.

வல்லரசு நாடுகளின் கூட்டத்தில்
வலுவான தீர்மானங்கள் இவை
இறந்த மக்களுக்காக அனுதாபம்– தப்பி
இருக்கும் மக்களுக்கு அகதிநாமம்.

வந்த நோயறிந்து மருந்துசெய்ய...
வரவில்லை மனம் இச்சபைக்கு – மக்கள்
அகதியான நிலை அறிந்து......
அதை தீர்க்கும் நோக்கமில்லை!

ஏனென்றால் இவர்களின்
அணு உற்பத்திப்...... பெருக்கத்தின்

அழுகுப்பொருட்களாம்,போர்
அழிவுப்பொருட்களை– ஏற்றி
அகிலத்தைச் சுற்றி சந்தைபோடும்
சித்திரத்தேரின் நுகத்தடிடிகுதிரையில்
சிக்கித் தேர் இழுப்போரே.....
நீதிதேவதையும், தர்மத்தாயுமா!
நீதிதேவதையும், தர்மத்தாயுமா!




படிப்பகம்

www.padippakam.com

# மலர்தல்
# வாடல்
# தெரிதல்

பூமி



'வித்தியாசங்களுடனேயே உலகம் – இதில்
ஒருவாறு ஒத்திருப்பவை குழுக்கள்.
முற்றத்தில் ஊர்ந்துகொண்டிருக்கும்
எறும்புகளுக்கிடையே அகப்பட்ட
ஒரு
தேங்காய்ப்பூப்போல..........ஒரு மனிதன்.
மலர்ந்தும்
வாடியும்
ஞானித்தும் கொண்ட.....
ஒரு ஈழத்து அகதியின்
வடதுருவ அனுபவங்கள்.'

வடமராட்சித்தாக்குதல் நடந்துகொண்டிருந்தசமயம்.
கொலைகள் எவ்வளவு என்று வானொலி அறிவித்துக்கொண்டிருக்கிறது.
ஆர்வத்தோடும் அந்தரத்தோடும் எல்லோரும் பேசிக்கொள்கிறோம்.
இந்தக்கொலைகளுக்கெதிராக ஒருநாள் உண்ணாமல் இருப்பதென்று முடிவாகின்றது.
எல்லோருக்கும் தெரிவிக்கிறோம்......ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.உயிர்களை உண்ணும் துப்பாக்கிகளுக்கெதிராக உண்ணாதிருந்து என்னசெய்யலாம்?
அல்லது உண்டும்தான் என்ன செய்யலாம்?
நாம் சிலவற்றை மறப்பதில்லை. அதுவும் இலகுவான காரியங்களை இலகுவில் மறப்பதில்லை. யாராவது செய்துவிட்டுப்போன ஒரு பழையதை தொட்டுத்தூக்கிக்கொள்வதில் தமிழர்கள் நாங்கள் கெட்டிக்காரர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இப்படித்தான் இந்த உண்ணாதிருப்பதும் முடிவாயிற்று.
கொலைகள் தேவைதானா என எண்ணிக்கொண்டிருக்கிறேன்.
விடயமறிந்த ஒரு பலஸ்தீனியன் வந்து எனக்கு ஆறுதல் கூறிவிட்டுப்போகிறான்.
கண்களைத்துடைத்துக்கொண்டு எதிரே நீண்டிருந்த வராந்தாவைப் பார்க்கிறேன்.
அங்கே ஒரு தமிழர்.
அந்த வராந்தாவில் போவதும் வருவதுமாக நடந்துகொண்டிருந்தார். அந்தத்தமிழர் அதிகமாக கவலைப்படுகிறாரோ என எண்ணி அவரை அணுகினேன்.
அந்தத்தமிழரின் கையில் ஒரு நூற்பந்து ஒன்று இருந்தது.அந்த நூற்பந்து அந்த அகதிமுகாமில் கடன்வாங்கப்பட்டதாகும். எமதுதேவைக்கு எடுத்துக்கொண்டு பின்னர் அதை திருப்பிக்கொடுத்தல்வேண்டும். அந்தப்பெரிய நூற்பந்திலிருந்து ஒரு பகுதிநூலை இன்னொரு பந்தாகச்சுற்றிக்கொண்டிருந்தார் அவர். அவரிடம் நான் அதுபற்றிக்கேட்டதற்கு; அடுத்தவாரம் தான் அகதிஅந்தஸ்த்துப்பெற்று இன்னொரு இடத்திற்கு மாற்றலாவதாகவும் அதன்பின் கிழியப்போகும் தனது உடைகளை தைத்துக்கொள்வதற்காக சிறிதளவு நூலை களவாடுகின்றேன் என்றார்.
அகதிகளுக்கு நூலேனோ......? ஊசியேனோ.........?
சந்தோசம் எனச்சொல்லிக்கொண்டு உண்ணாவிரதத்தில் நானும் உடகார்ந்து கொண்டேன்.
கொலைகளின் எண்ணிக்கை வானொலிச்செய்தியில் வளர்ந்துகொண்டிருந்தது.
இலைதுளிர்க்கும்மரங்கள் வெளியெங்கும் நிறைந்திருந்தன.
குளிர்தாங்காது வெளியேறிய பறவைகள் மீண்டும் தமது நாடு திரும்பியிருந்தன.
அவற்றின் மகிழ்வைப்போல் இளம்பசிய இலைகள் மரங்களில் தெரிந்தன.
அன்றுதான்......
அங்கே உயிருதிர் காலம்
இங்கேஇலைதுளிர்காலம் என்ற கவிதைவரிகளை எனதுமனம் கசக்கிக்கொண்டது.
நாடுதிரும்பிய பறவைகளைக்கேட்டேன் "எனது ஊருக்கும் போனீர்களா" என்று.
பதில்சொல்லாமலே இறக்கை எடுத்தன. எனது மனதுக்குள் இருந்த இறகுகள் உதிர்ந்தன.
வின்ரரில் செத்து மீண்டும் வந்த இளம் இலைகளைக்கேட்டேன்; அந்தப்பழைய இலைகளைத்தெரியுமா?" என்று.
"ஆமாம் அவைகளேதாம் நாமென்று" நகைத்தன.
வடமராட்சியில் விழுந்த குண்டுகள் எனது மனதுக்குள் எரிந்தன.
பிய்ந்துபோன வலையொன்றை ஒரு மீனவன் தைத்துக்கொண்டிருக்கும் காட்சியில் துப்பாக்கிக்கு தோட்டா மாற்றுவதுபோல அதில் எனதுமனநெருப்பு நூர்ந்துபோயிற்று.
இப்படியே புத்தரையில் வாழ்வின் இரகசியங்களை எண்ணிக்கொண்டிருந்தபோதுதான் பீற்றர் அங்கே வந்தான்.
அவன் ஒரு டனிஸ் வெள்ளைக்காரன். எங்கள் அகதிமுகாமில் தொட்டாட்டுவேலை செய்பவன். ஈழத்தமிழர்கள்மீது நல்ல அபிப்பிராயம் உள்ளவன் அவன் என்பதனால் அவனை நாங்கள் நல்லவன் என அழைத்தோம்.
மாலை எங்கள் எல்லோரையும் ஒரு பஸ்சில் ஏற்றிக்கொண்டு ஒரு கிறிஸ்தவ தேவாலயத்துள் விட்டான்.
பாதிரியார் வந்து பூசை தொடங்கினார்.
அவரின் முதுகின் பின்னால் ஒரு சிலுவை அறையப்பட்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

அதில் யேசு மரணித்திருந்தார். மீண்டும் எழுதல் இன்று சாத்தியமில்லைப்போலும்.
தமிழர்களுக்காகவே நடந்த அந்த பூசையின்பின் பாதிரியாரின் பிரசங்கம் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது.
"உங்கள்நாட்டில் உங்கள் உறவுகள் மரணிக்கப்படுவதை என்னால் தடுத்துநிறுத்தமுடியாதிருக்கிறது.ஆனால் உங்கள் உறவுகளுக்காக ஏங்கும் எனது உறவுகளாகிய உங்களுக்காக நான் யேசுவைப்பிரார்த்திக்கிறேன்." என்றார்.ஆலயத்தின் கதவோரமாக நின்றிருந்த பீற்றரை இப்போது காணவில்லை.
அவனைத்தேடிச்சென்றேன்.
வெளியே ஒரு மரத்தடியில் அழுதுகொண்டிருந்தான்.
அவனது முகம்முழுக்க நனைந்துபோயிற்று.
எனக்குவேர்த்தது.
அவனது அழுகையில் நான் முளைத்துக்கொண்டேன்.
அகதியாவதை அந்தஸ்தாக கருதுகின்ற இடத்திலிருந்து ஓடிவிடவேண்டும்போலிருந்தது.
யாருக்காகவோ அழுவது இலகுவல்ல.
பீற்றர் விம்மி விம்மி அழுதுகொண்டே இருக்கிறான்.
வடமராட்சியில் இவனுக்கு வீடுண்டா?
ஊர் இவனுக்கு வடமராட்சியா?
வடமராட்சிக்கும் டென்மார்க்கிற்கும் தூரம் நாலு கட்டை இல்லையே......
இவன் தமிழாவது பேசுவானா.......?
ஒரு வெள்ளைக்கார தொழிலாளி.அவ்வளவுதான் அவன்.
எனது நினைவிடை அங்கு நூற்பந்திலிருந்து இன்னொரு பந்து உருட்டிக்கொண்டிருக்கும் அந்தத் தமிழர் வருகிறார்.
எனக்கு ஒன்றுமட்டும் தெரிந்தது...........
எங்களைத் தெரியாதவர்கள் எமக்காக அழுதுகொண்டிருக்கிறார்கள்.
மேலே பார்க்கிறேன்..........
கறுப்புக்குருவியொன்று வெள்ளை எச்சமிட்டுவிட்டுப்போகிறது.
பீற்றர் அழுதுகொண்டே இருக்கிறான்.
அவனைத்தொட எனக்கு அச்சமா இருக்கிறது.
இந்த அச்சம் இந்த அகதிக்கு ஏனோ தெரியவில்லை.
என்னை நானே அறிந்து கொள்கிறேன்.

(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

....................

# கிணறு

........................................கவிஞர் பாரதிபாலன்..........

சேகருக்கு தென்மார்க்கில் அரசியல் தஞ்சம் கிடைத்துவிட்டது.

"என்ன சேகர் உமக்கு பொசிற்றிவ்வாமே " இவ்வாறுஅறிமுகமானவர்கள்அவனைவிசாரிக்கும் போதெல்லாம் அவன் உள்ளம் கிளுகிளுக்கும். ஏதோ உயர்ந்த தானத்தை தொட்டுவிட்ட பிரமையே ஏற்படும். புதிய கனவுகளில் மிதக்க ஆரம்பித்துவிடுவான்.

"வதனிக்கு லவ்லெற்றர் குடுக்கப்போய் பொடிப்புள்ளை அவள் தமயன்காரனிட்டை நல்லாய் வேண்டிக்கட்டீட்டார்."

இவ்வாறு பேசிய ஊரவர் வெட்கித்தலைகுனியும் நேரம் வந்துவிட்டது.

ஊரில் எப்போதோ அவனது பள்ளிவாழ்க்கையில் நிகழ்ந்ததே அந்தச் சம்பவம். அது சட்டையில் தவறுதலாக எழுதிய சலவைக்குறி......

ஊரவர் கண்களில் பளிச்சென்றுதெரியும் கறை.

ஊரில் நேற்றுவரை சேகர் ஒரு சமூகக்குற்றவாளியே. இன்று தென்மார்க் என்னும் அழகான வர்ணம் அந்தக் கறையை நீக்கிவிட்டது.

இரண்டுவருட தென்மார்க் செஞ்சிலுவைச்சங்கம் தந்தஆதரவில் அவனால் சாதிக்கமுடிந்த பெரியகாரியம் அந்தப் பழைய கறைய்யை பக்குவமாகத்துடைக்க வகைசெய்ததுதான்.

ஆம். கடந்த இரண்டுவருட கேள்விக்குறி வாழ்க்கைக்குள் அவனுக்கு யூரியா உரம்போட்டுதண் – ணீர் பாச்சியவளே வதனிதான்.

பள்ளிக்கூட கொப்பிப்பேப்பரால் சாதிக்கமுடியாத ஒன்றை அவனது ஒரே "வான்கடிதம்" சாதித்துவிட்டது. போராட்டவீரனாகிப் பார்த்துக்கூடச்சாதிக்கமுடியாத ஒன்றை "அகதிஅடைக்கலம்" எப்படியெல்லாம் சாதிக்கவைத்துவிட்டது. "ஆடு நனையக்கூடாது" என்பதில் வதனியின் தாய்க் குத்தான் எவ்வளவு அக்கறை."அம்மா சுகம்விசாரிக்கச் சொன்னா ....குளிர்நாடாம். உடம்பை கவனமாகப் பார்த்துக்கொள்ளட்டாம்." வதனியின் இந்த வரிகளை எல்லாம் பலமுறை வாசித்து தனது நீங்கிய கறைகளை மீண்டும் மீண்டும் துடைத்துக்கொண்டிருக்கிறான் சேகர்.

"எங்கை மச்சான் சிற்றி அடிக்கப்போறாய் ?" கூடஇருந்த ஜெயபால் ஏக்கத்துடன் கேட்டதற்கு, சேகர் பெருமிதமாக "எங்கடை ஊரவை யூலண்டிலே இருக்கினம். வதனியின்ரை ஒன்றுவிட்ட தமையன்மாரும் அங்கைதான். என்னையும் வரச்சொல்லுகினம். எப்படியோ ஊர்க்காரரோடை இருந்தால் உதவியாக இருக்கும் மச்சான்."



படிப்பகம்

www.padippakam.com

# மேலைத்தேயச் சுதந்திரத்துள் தமிழ் மாணவர்கள் .

கே . எஸ் . துரை.

டென்மார்க்கு நாட்டில் தமிழர்கள் குடியேறிய வரலாறு பத்தாண்டு காலத்தை வேகமாகப் பூர்த்தி செய்துவிட்டது . அறியாத பருவத்தினராக இங்கு வந்த குழந்தைகளில் பலர் இப்போது ஆளாகி நிற்கிறார்கள் . இந்தப் பிள்ளைகள் சமூகத்திற்கும் பெற்றோர்கள் சமூகத்திற்குமிடையே இடைவெளியானது ஆண்டுதோறும் ஓர் ஊமை வேகத்தில் அதிகரித்துச் செல்வதை புள்ளி விபரங்கள் இல்லாவிடிலும் அனைவராலும் நன்கு ஊகிக்க முடிகிறது.இந்த முரண்பாடுகளின் உற்பத்தி தமிழ், டெனிஸ் என்ற இரண்டு வேறுபட்ட வாழ்க்கை முறைகளின் தளங்களிலிருந்தே தோற்றம் பெறுகிறது. உண்மையில் தமிழர் கலாச்சாரம் பேணப்பட்டதாகவோ ? டெனிஸ் கலாச்சாரம் தமிழர்களால் பூரணமாகத் தழுவப்பட்டதாகவோ இதுவரை முடிவுகள் இல்லை. " திருமணம் செய்து கொள்வது நல்லதா ? அல்லது செய்யாமல் விடுவது நல்லதா ? என்று என்னிடம் கேட்பீர்களானால் இந்த இரண்டு முடிவுகளில் எதை நீங்கள் எடுத்தாலும் அதற்காகப் பின்னர் வருத்தப்படுவீர்கள் என்றே கூறுவேன் . " என சோக்கிரட்டீஸ் சொன்னதை நினைவுபடுத்துவது போல , டெனிஸ் கலாச்சாரம் பற்றி டெனிஸ் காரரும் தமிழ்க் கலாச்சாரம் பற்றித் தமிழரும் கடந்த காலங்களில் இரு வேறு கோணங்களில் சிந்தித்தனர். இறுதியில் இவ் இருசாரருமே வருத்தப்படக் கூடியவகையில் ஓர் மூன்றாவது கோணமாக நமது புதிய தலைமுறையினரைப் படைத்து வைத்திருக்கிறது டெனிஸ் கலாச்சார மயமாக்கல் வேலைத் திட்டம் . இதை நாம் கடந்த பத்தாண்டு கால படிப்பினையின் பின் நிதர்சனமாகக் காண்கிறோம் .

இன்றைய இளைய தலைமுறையினர் இந்த நாட்டில் சந்திக்க வேண்டியுள்ள புதுப்புது வகையான பிரச்சனைகளை எண்ணற்ற தலையங்கங்களில் வரிசைப் படுத்தலாம். ஆனால் இவையெல்லாம் கிளைநதிகளாக ஓடிவந்து விழுவது சுதந்திரம் என்னும் தாய் நதியில்தான். டென்டமார்க்கில் வாழும் இப்பிள்ளைகள் பூரண சுதந்திரம் உடையவர்கள். அவர்களை தமிழ்க் குடும்ப அடிமைச் சாசனங்களாலோ , அல்லது துருக்கிய குடும்ப அடிமைச் சாசனங்களாலோ கட்டுப்பாடு செய்ய முடியாதென டெனிஸ் சமூகவியல் பிரிவும் , சட்டத்துறைப் பிரிவும் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துகின்றன . இதை அறிந்துகொண்ட டெனிஸ் மொழியை ஆற்றொழுக்காகப் பேசவும் , எழுதவும் , வாசிக்கவும் தெரிந்துள்ள இளம் தலைமுறையினர் தமது சுதந்திரத்தை தயக்கமின்றிக் கையில் எடுக்கின்றனர் . இந்த வேகம் தமிழரின் குடும்ப உறவு முறைக்குள் மறைந்திருக்கும் எழுதப் படாத அடிமைத் தனங்களுக்கெதிராக தனது முதற்கட்டப் போரை இப்பொழுது அகிம்சை வழியில் ஆரம்பித்திருப்பது தெரிகிறது. இவர்களின் கைகளில் இவர்கள் கோரும் சுதந்திரத்தை வழங்கலாமா? அல்லது மறுக்கலாமா? என்ற கேள்விகளில் எதற்கு இணங்கினாலும் சோக்கிரட்டீஸ் பாணியில் வருத்தமடைய நேரலாமென சமூகம் அஞ்சி நிற்கிறது . அதே வேளை சாதி , சமயம் என்ற முதல் நிலைப் படிகளுக்குள்ளேயே குழுநிலைப் பட்டு நிற்கும் சமூகமானது இது குறித்து தன்னிடையே ஒரு பொதுக் கருத்தை உருவாக்கும் வல்லமையையும் இழந்து நிற்பதும் தெரிகிறது .



படிப்பகம்

www.padippakam.com

இதுவரை கிடைத்துள்ள தரவுகளிலிருந்து பார்க்கும் போது இந்தப் பிரச்சனைகளைக் கையாழுவதற்கு கூடுதலான பெற்றோர்களின் சமூகத்தினர் பாசப்பிணைப்பு என்கின்ற கோட்பாட்டையோ அல்லது அவசரத் திருமணம் என்கின்ற ஏற்பாட்டையோ தான் தமது இறுதித் துரும்புச் சீட்டாக நம்பியிருக்கின்றனர் . எல்லை மீறினால் சாவுக்கும் இல்லை என்ற எச்சரிக்கை விளக்கும், முடியாத பட்சத்தில் இவர்கள் திருந்த மாட்டார்கள் ! கடவுளே இவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பது போன்ற துறவு மனப்பான்மையையும் இப் பாசத்தின் மேடையில் நின்று சூசகமாக வெளிக்காட்டிக் கொள்கின்றனர் . எப்பொழுதும் ஒரு சமூகப் பிரச்சனையை இவ்விதம் எடுத்தேனா , போட்டேனா என்றவகையில் அணுகமுடியாது. பிரச்சனைகளின் வடிவத்தை உண்மையான காரண காரியங்களோடு அதேவேளை உண்மைக் கண்ணின் மையத்தைத் தொடும்படியாகவும் அலசப்படவேண்டியதே அவசியமான பணியாகும் .

உலகின் மிகக் கூடுதலான சுதந்திரத்தை அனுபவிக்கும் இனக்குழு , மனிதனின் ஒவ்வொரு சுதந்திரித்த நடவடிக்கைகளையும் எழுதப்பட்ட சட்டங்களால் அங்கீகரிக்கும் நாடு, உலகின் அதிகூடிய சுதந்திரமுள்ள பெண்கள் போன்ற காத்திரமான விடயங்களைத் தன்னகத்தே கொண்டநாடு டென்மார்க். இத்தகைய ஒரு வளர்ச்சி பெற்ற வாழ்க்கைச் சூழலுக்குள் வளரும் பிள்ளைகள் இங்கு திறந்த வெளியாயிருக்கும் சுதந்திரச் சூழலை தாமும் ஏன் பயன்படுத்தக் கூடாதென வேட்கை கொள்வது இயல்பான காரியம். ஒரு டெனிஸ்காரரின் பார்வையிலும் இது மிக நியாயமான கோரிக்கையாகவே தென்படும். ஆயினும் சுதந்திரத்தைக் கையளித்தல் என்ற விவகாரத்தில் தமிழர் சமூகத்திடையே பல நுண்பாகப் பிரச்சனைகள் இழையோடியிருப்பதை டெனிஸ் சமூகவியலாளர்கள்ஆய்வு செய்தல் அவசியம். இந்த ஆய்வை தமிழர்கள் நாய் இறைச்சி தின்பவர்களா? அல்லது பொருளாதார அகதிகளா? என்ற கோணத்தில் கடந்த காலங்களில் சிலர் ஆய்வு செய்ய முற்பட்டனர். இது உண்மையின் தேடலை திசைதிருப்பி விடும்.

சுதந்திரத்தைப் பெறுவது எவ்வளவு முக்கியமானதோ அதைவிட முக்கியமானது அதை அனுபவிக்கத் தெரிந்திருப்பதாகும். இந்த முக்கியமான விடயத்தில் தமிழ் மக்களுக்கும் ஐரோப்பியருக்குமிடையே பெரும் ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. எவ்வாறெனில் ஐரோப்பாவில் சுதந்திரத்தின் வரலாறு மிகமிக நீண்ட அனுபவங்களைக் கொண்டதாகும். கி .பி . 1215 லேயே மக்னாகாட்டா என்ற ஒப்பந்தத்தின் மூலம் " சட்டத்தின் முன் யாவரும் சமம் " என்ற உரிமையை ஆங்கிலேயர் பெற்றுவிட்டனர் . 1688 இல் உரிமைகள் சட்டமூலத்தின் மூலம் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி மன்னன் எதுவும் செய்ய முடியாதென்பதும் அங்கு உறுதி செய்யப்பட்டது. மக்களின் குறிக்கோள் நிறைவேறுவதை எந்த ஒரு அரசாங்கமாவது தடைசெய்யுமாயின் அந்த அரசாங்கத்தை மாற்றுவதன்றி ஒழிப்பதற்கும் அம்மக்களுக்கு உரிமையுண்டு என்று 1776 அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் வலியுறுத்தியது. சுதந்திரத்தின் அருமையை மக்கள் உணர்ந்து இங்கிலாந்து மக்கள் விழித்துக் கொண்டபோது அங்கு 1688 இல் புரட்சி வெடித்தது. இத்தகைய புரட்சி அமெரிக்காவில் 1775 இல் நடைபெற்றது. பிரான்சில் 1789 இல் நடைபெற்றது. இந்தச் சுதந்திரப் போர்களின் அனுபவத்தோடு பல நூற்றாண்டுகளைத் தாண்டி ஐரோப்பா நடைபயின்றுவிட்டது. மேற்கண்ட நீண்ட காலப் பரப்பில் சுகந்திரத்தை எப்படித் துய்ப்பதென்ற நெடிய அனுபவத்தையும் ஐரோப்பியர்கள் தமது சுதந்திர வரலாற்றோடு சேர்த்தே பயின்று விட்டனர் என்பதையும் நாம் மறக்கலாகாது.



படிப்பகம்

www.padippakam.com

மேலும் அமெரிக்க அரசியல் யாப்பில் மனிதனின் இன்ப வாழ்வு என்றவிதி கூட கட்டாய சுதந்திரமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. திருமணம் செய்து கொள்ளாமல் நட்புரிமையுடன் வாழ்வது பின் விரும்பிய நேரம் பிரிந்து செல்வது என்ற அலகையும் இப்படி ஒரு விதியின் கீழேயே அவர்கள்பின்பற்றி வருகிறார்கள். இவ்விதமான வளர்ச்சிகளோடு ஒப்பிடும் பொழுது இலங்கைத் தமிழரின் சுதந்திர வரலாறு மிகமிகக் குறுகிய ஐம்பது ஆண்டுகால அனுபவத்தையே கொண்டிருக்கிறது. போத்துக்கேயர் 1505 இல் இலங்கை வந்தபோதும், 1618 இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோதும் அங்கு மன்னராட்சியே நடைபெற்றது. அதன் பின் வந்த நானூறு ஆண்டுகால காலனித்துவ வரலாற்றில் நாம் அடிமைகளாக இருந்தது மட்டுமல்லாது சம காலத்தில் சர்வதேச சமூகம் பெற்றுக்கொண்ட ஜனநாயக உரிமைகளின் வளர்ச்சியை நினைத்தும் பார்க்க முடியாதவாறு ஐரோப்பியர்களால் தடுக்கப்பட்டோம். அதேபோல சுதந்திரத்தின் பின் ஆட்சிக் கதிரைகளைக் கைப்பற்றிக்கொண்ட கீழைத்தேய பேரினவாத அரசியல்வாதிகளும் மக்களை மந்தைகளாகவும், குருடர்களாகவும் வைத்திருப்பதில் பழைய ஐரோப்பியக் கொள்கைகளையே தொடர்ந்தும் கடைப்பிடித்து வந்தனர். இதனால்தான் எமது குறுகிய சுதந்திர வரலாறு மிக விரைவாக பெரும் சுதந்திரப் போரைச் சந்திக்கும் பருவத்தையடைந்தது. 1215 மக்னாகாட்டாஒப்பந்தத்திலுள்ள, " சட்டத்தின் முன் யாவரும் சமம் ." என்ற உரிமை கூட இல்லாத நிலையில்தான் ஈழம் வாழ் தமிழினம் தனது சுதந்திரப் போரை முன்னெடுத்துள்ளது. உண்மையில் பழைய மக்னாகாட்டாவை மறந்து விட்ட நவீன ஐரோப்பா புதிதாகச் சுதந்திரம் கோரும் சிறிய இனக்குழுக்களின் ஆத்மத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் தவிப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்

சுதந்திர வரலாறு மிகமிக இளமை நிலையில் இருக்கும் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இன்றும் ஜனநாயகத்தின் பெயரால் ஒருவித குடும்ப ஆட்சிமுறையே அமுலில் இருந்துவருகிறது. இதற்கு உதாரணமாக இந்தியாவில் நேரு குடும்ப ஆட்சியையும், இலங்கையில் பண்டாரநாயக்கா குடும்ப ஆட்சியையும் குறிப்பிடலாம். மக்கள் சுதந்திரத்தின் அருமையைப் புரிந்து கொள்ள முடியாதிருப்பதால்தான் தென்னிந்தியாவில் மக்கள் நடிக நடிகையரை ஆட்சிபீடமேற்றத் துடிக்கின்றனர். தலைக்குப் பதினைந்து ரூபா பேரம்பேசி மக்களை ஆட்டு மந்தைகள் போல தேர்தல் கூட்டங்களுக்கு அள்ளிச் செல்கிறார்கள் அரசியல்வாதிகள். இலஞ்சம், ஊழல், அதிகாரதுஷ்பிரயோகம் யாவும் இந்த அனுபவக் குறைவிலிருந்தே தோற்றம் பெறுகின்றன.இத்தகைய விளைவுகளை முன்னரே அவதானித்துக் கொண்ட பாரதி தனக்கேற்பட்ட சலிப்பை,

" **ஓரஞ் செய்திடாமே ...**
**தர்மத்துறுதி கொன்றிடாமே . .**
**ஊரையாளும் முறைமை — உலகில்**
**ஓர் புறத்தும் இல்லை.**" எனப் பாடி உலகையே வெறுத்தான். இன்று டென்மார்க்கில் தமிழ் மாணவர்களின் சுதந்திரம் பற்றிப் பேசும்போது மேற்கண்ட கீழைத்தேய நாடுகளின் சுதந்திர வரலாற்றுப் பின்னணிகளையும் சீர்தூக்கிப் பார்ப்பது அவசியம்.

ஒருவன் தான் பிறந்து வளர்ந்த இனம், ஊர் அந்நாட்டு அரசின் ஆட்சிமுறை ஆகியவற்றிற்கு அமையவே உருவாகிறான், உருவாக்கப் படுகிறான். இதை நாம் "**பிறப்பின் சார்பால் குற்றமே குணமாய் வாழ்வான் .**" என்னும் பெரிய புராணப் பாடலிலும் காணலாம். ஒருவிடயத்தைக் குற்றமாகப் பார்ப்பதும், குணமாகப் பார்ப்பதும் அவ்வவ் மக்கள்குழுவின் வாழ்க்கை முறையைப்



படிப்பகம்

www.padippakam.com

பொறுத்ததே. இது உலகில்உள்ள அனைத்து மக்களுக்குமே பொதுவான விதி. ஏனெனில் சுதந்திரத்தின் பொருளை இந்த அடையாளத் திற்குள்ளால் தான் ஒவ்வொரு மனிதனும் விளங்கிக் கொள்ள முற்படுகிறான். பெண்களின் மார்பை ஆணும் , ஆணின் மார்பைப் பெண்ணும்பற்றியபடி ஓடும் " லாப்ப லாப்ப .. " என்ற பாடலுடன் கூடிய மக்கள் நடனத்தை டெனிஸ் மக்கள் மிகச் சாதாரணமாக தம் விழாக்களில் ஆடிவருகிறார்கள். இருப்பினும் அந்த நடனத்தின் போது அம்மக்களின் உணர்ச்சியானது எல்லைமீறிச் செல்வதில்லை. ஆனால் பெண்ணின் மார்பகத்திற்குள் கனவுகளை வளர்க்கும் தமிழ்ச் சினிமா அரக்கனின் அடிமைகளாக இருக்கும் பெரும் பான்மை யோரைக் கொண்ட தமிழர் தலை முறை ஒரு புறத்தில் " லாப்ப லாப்ப " நடனத்தையும், மறுபுறம் தமிழ்ச் சினிமா உணர்வுகளையும் ஒரே நேரத்தில் தூக்கி நகர முடியுமா ? என்பதை நாம் வெளியில் பேசிக் கொள்ளா விட்டாலும் எமக்குள்ளாவது கேட்காமலிருக்க முடியாதல்லவா ? இது போலவே தமிழர்களின் கைகளில் சுதந்திரமாக ஒப்படைக்கப் பட்ட தொலைபேசிகளை நம்மில் பலர் எப்படிப் பயன் படுத்தியுள்ளோம் என்பதையும் சீர்தூக்கிப் பார்த்தால் சுதந்திரத்தைப் பெறுவதை விட அதை நெறியோடு பயன்படுத்துவது எவ்வளவு சிரமமான காரியம் என்பதைச் சொல்லாமலே புரிந்து கொள்ளலாம்.

அப்படியானால் தமிழ் மாணவர்களுக்கு பூரணமாக டெனிஸ் சுதந்திரத்தை எவ்விதம் வழங்குவது என்பதே ? இறுதிக் கேள்வியாக எஞ்சுகிறது. உண்மையில் எல்லா மனிதர்களுக்குமே பூரணமான சுதந்திரம் வழங்கப்படவே வேண்டும்.இது மறுப்பிற்கிடமில்லாத உண்மை. ஆனால் சுதந்திரத்தைக்கையில் எடுக்கும் ஒருவர் தான் யார்? தனது இன மொழி பண்பாட்டு அடையாளங்கள் யாது? தான்தனது சமூகத்திற்கு ஆற்ற வேண்டியுள்ள சமூகவியல் கடமைகள் என்ன? என்ற விவகாரங்களில் பூரண தெளிவு பெறக்கூடிய வேலைத் திட்டங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் சுதந்திரம் எப்படி மனிதனின் பிறப்புரிமையோ அதேபோல மேற்சொன்ன விடயங்களையும் ஒருவர் அறிந்திருக்க வேண்டியதும் ஓர் அடிப்படை மனித உரிமையாகும். சுதந்திரமும் இப் பண்பாட்டு விடயங்களும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை.இதில் ஒரு பக்கத்தை மறைத்துவிட்டு , பூரண சுதந்திரம் பற்றிப் பேசுவதே தற்போதைய சுதந்திரத்தை வழங்கலாமா? என்ற கேள்வியில் மறைந்திருக்கும் மூலப் பிரச்சனையாகும்.

இந்த இரண்டு பக்கங்களையும் மாணவர்கள் தெளிவாகப் புரியும்போது , பூரணசுதந்திரம் என்பதும் இயல்பாகவே அவர்களுடைய கைகளிற்குப் போய்விடுகிறது. அத்தகைய நிலையில் தான் சுதந்திரம் என்பது ஒரு சுயகட்டுப்பாடு என்ற தத்துவார்த்தக் கருத்தும் அவர்களிடையே இயல்பாக முகிழ்த்து நிற்கும். சமுதாயத்தில் அது அழகோடு பொதுளும். இதைத் தான் மகாத்மாகாந்தியும், "மனிதனுக்கு கடமைகளே முக்கியம் . கடமை இருந்தால் உரிமை தானாக வரும் ."என்று குறிப்பிட்டார். இவைகளை விடுத்து பூரண சுதந்திரம் என்ற கோசத்தை அரை வேக்காட்டுத் தனமாக முன் வைத்தால் அது நம்மை இன்னொரு அடிமைத் தனத்திற்கே அழைத்துச் செல்லும். இதையே தமிழர் புலம் பெயர்ந்து அடையாள மிழந்து போன ரியூனியன் , மொறீசியஸ் போன்ற தீவு நாடுகளில் நாம் நிதர்சனமாகக் காண்கிறோம்.

**" தனது தேசிய அடையாளத்தை ஒரு இனம் இழந்துவிடும்போது**
**இயல்பாகவே அது தன் சுதந்திரத்தையும் இழந்துவிடுகிறது. "**

என்ற உண்மையை எப்போது ஒரு சமூகம் உணர்ந்து கொள்கிறதோ அப்போதே அது சுதந்திரத்தின் படிக்கட்டில் தன் பாதத்தை உறுதியாகப் பதித்து விடுகிறது. ■



படிப்பகம்

www.padippakam.com

# ஆதவனின் *பார்வையில்*

சினிமா

வணக்கம்!

நான் ஒரு சினிமா பார்த்தேன். எப்பொழுதோ காற்றில்வந்த அலையாக அது என் நெஞ்சில் மோதிற்று.

வானவில்லின் வர்ணஜாலங்களைத் திரையில் கொண்டுவர முயன்று பலர் தோற்றுத்தான் போய் விட்டார்கள்.

காதலின் வஸீகரங்களைப் பலர் திரையில் காட்ட முற்பட்டார்கள்.

நான் பார்த்தபடத்தின் பெயர் தேசநிசா அதனை இயக்கியவரின் பெயர் லெஸ்ரர்–ஜேம்ஸ் பீரிஸ்.அது ஒரு சிங்களப்படம். நான் பார்த்தது 1977'ம் ஆண்டு. அந்தப்படம் ஒரு கறுப்புவெள்ளைப் படம்.

லெஸ்ரர்–ஜேம்ஸ் பீரிஸைப் பற்றிக் கதைக் காமல், நான் இலங்கைஇந்திய சினிமாவைப் பற்றிக் கதைக்க முடியாது. அவர் தனது தள்ளாடும் வயதில்(Cann film festival) கேன் பிலிம் பெஸ்ரிவல்களில், சிறந்த படங்களைத் தேர்வுசெய்யும் ஒரு நடுவர் சபையில்– ஒரு ஜூரியாகப் பணியாற்றுகிறார்.

சுமார் 18வருடங்களாக இந்தத்திரைப்படம் என்கண்களில் நெஞ்சில் இதயத்தில் ஆணி அறைந்தது போல் நிற்கின்றது. நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 16mm திரையில் முதன்முதலில் இந்தப்படத்தைப் பார்த்தேன். பின்னர் ஒரு வருடங்கழித்து கொழும்பு மருதானை (Elphiston)எல்பிஸ்ரன் தியேட்டர் திரையில் பெரிதாகப் பார்த்தேன்.

இந்தப் படத்தைப்பற்றி நான் 'காகம்' வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளத் தான் வேண்டும்.

இந்தப் திரைப்படத்தைப்பற்றி அ.யேசுராசாவை ஆசிரியராக கொண்ட 'அலை' என்ற ஈழத்துச் சஞ்சிகை அந்தக்காலத்தில் ஒருவிமர்சனத்தை எழுதியது.'தேசநிசா' என்ற பதத்திற்கு 'கண் களின் காரணத்தால்' என்று தமிழ்ப்படுத்தி அந்த விமர்சனம் வந்தது. அந்தக் காலத்திலேயே நல்லதொரு விமர்சனத்தை... நல்ல படங்களை இனங்காண வேண்டும் என்ற ஆதங்கத்தில் தமிழ்வாசகர்கள்....... பார்வையாளர்கள் மத்தியில் 'அலை' சஞ்சிகை வெளியிட்டமை பாராட்டுதற்குரியது.

* * * *

கண்கள் தெரியாத ஒரு குருட்டுக் கதாநாயகி(மாலினி பொன்சேகா). அவளுக்குத் தன் தாயார் கொய்து கொண்டு வரும் வெள்ளரிப்பூக்களை சந்தையில் விற்பதுதான் தொழில். அந்தப்பூக்கள் விற்கும் சந்தை யென்பது ஒரு புத்தவிகாரைக்குப் பக்கத்தில் உள்ளது. புத்த பகவானைத் தரிசிக்கவரும் பக்தர்கள் வெள்ளரிப்பூக்களை வாங்கிச் செல்வார்கள். அவர்கள் கொடுக்கும் பணத்தில் தான் அந்தத் தாயும், குருட்டு மகளும் காலத்தை ஓட்டுகிறார்கள்.

அவர்கள் வாழும் கிராமமோ ஒரு பின்தங்கிய கிராமம். 'எல்லைக்கோட்டு'க்குக்கீழே வாழும்.. மூடநம்பிக்கைகள் நிறைந்த கிராமம். இந்தக் கிராமத்தில் கோவணத்தையே சிறந்த ஆடையாகக் கருதும் ஒரு 'பைத்தியக்காரன்' அல்லது பைத்தியம் என ஊராரால் சொல்லப்படும், ஒரு விகாரமுகத்தை உடையவன் வாழ்கின்றான். கருமை நிறத் தோனாயும், பற்கள் மிதந்தோனாயும், அவலட்சணம் என்பதன் இடுகுறியாகவும் வாழ்கிறான் அவன் (ஜோ.அபயவிக்கிரம). அந்தக் கிராமத்தைப் பொறுத்தவரையில் அவன் அவலட்சணத்தின் குறியீடு. அநியாய மாகக்கப்பட்ட மனிதன். கண்கள் தெரியாத காரணத்தாலும், வறுமையினாலும் அந்த அழகிய பூக்காரியும் அந்நியப்படுத்தப்படுகிறாள். இந்த அவலட்சணத்திற்கு ஒரு இளகியமனம். இந்த மனத்தினால் அவன் நிறைய உதவிகளை அந்தத் தாய்க்கும் மகளுக்கும் செய்கிறான். இவனது அவலட்சணமுகத்தை தெரியாமலே அந்தக்குருட்டு அழகி இவன் மேல் காதல் கொள்ளுகிறாள். இந்தப்படத்தில் வரும் அற்புதமான காட்சிகளில் ஒன்று: அவர்கள் தாமரைக்குளத்தில் குளிக்கப் போவார்கள். அப்பொழுது அவள் ஆடை மாற்றும்போது.... அவளுக்குத் தெரியாத காட்சிகள் தனக்கும் தெரியக்கூடாது என நினைத்து இந்த மென்மையுள்ளங் கொண்ட



படிப்பகம்

www.padippakam.com

அவலட்சணம், ஒருபாறையின் பின்னே பதுங்கிக் கண்களைப் கண்களைப் பொத்திக் கொள்ளும்.

எங்கோ ஒரு மலையுச்சியில் ஒரு சிறந்த வைத்தியர், கண்களைச் பார்வையடையச் செய்வாராம் எனக்கேள்விப்பட்டு—அங்கே இந்த மூவரும்(அவலட்சணம், குருடி, தாய்) செல்கிறார்கள். வைத்தியர் அவளது கண் களுக்கு உரிய முறையில் வைத்தியம் செய்கிறார். முடிவில்— ஒரு சூரிய உதயத்தில் அவளது கண்கட்டுகளை அவிழ்ப்பது என்று முடிவாகிறது.

சூரிய உதயத்திற்காக யாவரும் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். அப்போதுதான் இந்த அவலட்சணத்திற்கு தன்மீது சிந்தனை ஏற்படுகின்றது. தான் அவலட்சணமாய் இருக்கிறேன் என்ற பிரக்ஞை ஏற்படுகின்றது. தற்செயலாக அவளது கண்கள் பார்க்க ஆரம்பித்துவிட்டால்.. அவள் என்னை வெறுக்க ஆரம்பிக்கமாட்டாளா? என்றகேள்வி எழுகின்றது. அவளது வெறுப்பிற்காகவா தான் அவளை இந்த வைத்தியரிடம் அழைத்து வந்தேன், இப்படியாக; நன்றாகவே குழம்புகிறான். குழம்பிக்குழம்பி அவன் மீது அவனே வெறுப்படைந்து ஓடி..ஓடி.. ஒரு பற்றைக்குள் மறைந்து கொள்கிறான்.

சூரியன் உதிக்கிறது.
கண்களின் கட்டுக்கள் அவிழ்கப்படுகின்றன.
கண்கள் தெரிகின்றன.

தனக்கு இவ்வளவு உதவிசெய்த தன் காதலன் எங்கே என்று தேடுகிறாள். மலையுச்சியில்... பாறைகள் நடுவே.... பற்றைகள் இடையே பதுங்கியிருக்கும் ஒருவனைப் பார்த்து நீதானா அவன் எனக் கேட்கிறாள்.

படம் முடிந்து விடுகிறது.

* * * * *

மீண்டும் மீண்டும் பார்த்தாலும் பார்க்கத் தூண்டுகிற ஒரு திரைக்காவியத்தின் கதையை மேலே சொன்னேன். சென்றமுறை சினிமாவின் மொழி காட்சிமயமானது என்று குறிப்பிட்டேன். கண்கள் தெரியாத அந்தக்கதாநாயகியின் 'காட்சி' எப்படியிருக்கும் என்பதை திரையில் காட்டிய மகாமேதை என லெஸ்ரரைக் குறிப்பிட்டால் அது மிகையாகாது.

* * * * *

சென்றமுறை flash back என்றால் என்ன வெனச் சொல்லியிருந்தேன். இந்தமுறை 'close up'என்றால் என்னவென்று பார்ப்போம். 'குளோஸ் அப்' எண்டால் கிட்ட இருப்பது எண்டுதான் எல்லாரும் நினைப்பியள். ஆனால் சினிமாலை அப்படியில்லைக் கண்டியளோ.

நவீன சினிமாவின் மொழியில் குளோஸ் அப் எண்டால்... முழுத்திரையில்— ஒருமுகம், அல்லது முகத்தின் இரு கண்கள், உடலின் ஏதாவது ஒரு அங்கம், ஒரு நரைத்தமுடி, ஒரு நீண்டவிரல், காது, காதிற்குக் கீழேயுள்ள மச்சம், அல்லது ஒரு முழுப் பொருளின் ஏதாவது ஒருபகுதி தெரிவதையே 'குளோஸ் அப்' எண்டு சொல்லுகினம்.

இந்தமாதிரியான 'குளோஸ் அப்'காட்சிகளை.. தமிழ்ச் சினிமாவில் என்னென்னத்துக்கு பாவிக்கினம் எண்டு நான் எழுதினால் 'காகம்' பத்திரிகை என்ரை எழுத்தைத் தணிக்கை செய்து போடுங்கண்டியளோ! ஆனபடியா அதை எழுதேல்லை.

எண்டாலும், தமிழ்ப் படத்திலையும் சில நல்ல விஷயங்கள் இருக்குது பாருங்கோ!

எனக்காண்டி ஒருக்கா:— பாரதிராஜான்ரை 'முதல் மரியாதை'யைப் பாருங்கோ! அதிலை வாற 'பூங்காற்றுத் திரும்புமா' என்ற பாட்டுக் காட்சிகளைப் பாருங்கோ. 'சூம்' 'லென்ஸை' எப்படி அர்த்தத்தோடை முன்னும்பின்னும் அசைக்கலாம் எண்டு விளங்கும்.

* * * * *

அடுத்த இதழில் லெஸ்ரர்—ஜேம்ஸ் பீரிஸ் பற்றிய மேலதிக விபரங்களோடும் மேலும் சில 'ரெக்னிக்கல்' விஷயங்களோடும் எனது பார்வையில் சினிமா விரியும்.

இவண்
ஆதவன்



படிப்பகம்

www.padippakam.com

# நட்சத்திரமும் நடிகையும்

(தொடர்)

**பிரபல சிங்களநடிகை அனோஜா வீரசிங்கவின் பேட்டி**

*சிங்களத்தில் இருந்து ஆங்கிலம்:* சுனிலா அபயசேகரா

*தமிழில்:* ஆதவனும், மல்லீஸ்வரியும்

*கேள்வி: ஏன் நீங்கள் கலைப்படங்களில் நடிப்பதை நல்லதாக நினைக்கறீர்கள்? வியாபாரப் படங்களில் நடிப்பதற்கும் கலைப் படங்களில் நடிப்பதற்கும் என்ன வித்தியாசம்?*

வியாபாரப் படங்களில் வரும் பாத்திரங்கள் யதார்த்தத்தை விவாகரத்துச் செய்துவிட்டன. உ+ம்: ஒரு ஆணும் பெண்ணும் சந்திக்கும் பொழுது நிஜவாழ்வில் அவர்கள் ஒருபாடலை 'ஹம்' பண்ணலாம் அல்லது முணுமுணுக் கலாம். ஆனால் திடீரென எழுந்து ஆடிக் கொண்டும் பாடிக்கொண்டும் பார்க்கில் திரிய மாட்டார்கள். அத்துடன் ஒருவன் தனது வெற்றுக்கரங்களால் ஆயுதந்தரித்த 10 குண்டர் களை அவன் தான் ஒரு துளி இரத்தமும் சிந்தாது அடித்து விழுத்துவது சாத்தியமா? இல்லை. யதார்த்தத்தில் இந் நிகழ்ச்சிகள் ஒருபோதும் நிகழாது. எனவே ஒரு பாத்திரத்தை உயிருள்ள ஒரு பாத்திரமாக படைக்க முடியாது.

பெரும்பாலான வர்த்தகப்படங்களில் நான் 'ஜூலியட்'டாகவே (ரோமியோ ஜூலியட்டில் வரும்)நடித்திருக்கிறேன். இது இலகுவானது. பெரும்பாலான வர்த்தகப் படங்கள் ஒரே மாதிரி யானவை. ஒரே மாதிரியான சம்பவங்களில் திரும்பத்திரும்ப நடிக்க வேண்டி வருகிறது. இந்த மாதிரியான நடிப்பில் கற்றுக்கொள்ள எதுவுமே இல்லை. சிலசமயம் 'ஸ்கிரிப்ட' இல்லாமலேயே செட்டுக்குள் நுழைவோம். டைரக்டர் சொல்லுவார் 'உன் காதலனை மணம் முடிக்க உனது தந்தையார் தடையாக இருக்கிறார். நீ சோகமாக நடிக்கவேண்டும்.' உடனே நாங்கள் இரண்டுபோத்தல் கிளிசரினை அப்பிக்கொண்டு கிடாரக்கணக்கில் கண்ணீரை வடித்துக்கொண்டு 'அப்பா என்னைப் போக விடுங்கள்' என்று சொல்லுவோம். இதை நான் பலமுறை நடித்துள்ளேன்.

நான் வர்த்தகப்படங்களின் ஊடாகத்தான் திரைப் படத்தொழிலுக்கு வந்தேன். என்னை யாரும் தவறாகப் புரிந்து கொள்ளவேண்டாம். வியாபாரப்படங்களைத் தாக்குவது எனது நோக்கமல்ல. நான் விருது பெற்றவுடன் பலர் சொன்னார்கள் வியாபாரப்படங்களில் நடிப்பதை நிறுத்தும்படி. ஆனால் நான் நிறுத்தவில்லை. எனது பாணியில் அதன் கன்னத்தில் ஒரு அறை கொடுக்கிறேன்.. அவ்வளவுதான் நான் வியாபாரப் படங்களில் நடித்துக்கொண்டே இருப்பேன். ஆனால் ஒரு நடிகைக்கு அப் படங்களில் வேலையில்லை என்பதை மட்டும் உணர்கிறேன்.

ஆனால் நான் ஒன்றைக் கட்டாயம் சொல்ல வேண்டும். கலைப் படங்களில் நடிப்பதிலும் பார்க்க வியாபாரப் படங்களில் நடிப்பது கூடக் கஷ்டமானது. கலைப்படங்களில் வரும் பாத்திரங்கள் யதார்த்தத்தை அடிப்படை யாகக் கொண்டவை. நாங்கள் சிறிது முயற்சி எடுத்தால் அப்பாத்திரங்களை உயிருடன் கொண்டு வரமுடியும். இந்தப் பாத்திரங்களை நீங்கள் உங்கள் கிராமங்களிலோ, தெருக் களிலோ காணலாம் அல்லது காணுவோம் எதிர்பார்ப்புடன் இருக்கலாம். எனவே பாத்திரத்தை விளங்கிக் கொண்டால் அதைப் போல் நடிப்பது இலகுவானது. ஏனெனில் அது யதார்த்தமானது. ஆனால் வியாபாரப் படங்களில் அப்படியல்ல. அதில் வரும் பாத்திரங்கள் இந்த உலகத்தில் இருந்து முழுமையாகவே விடுபட்டவை. நீங்கள் ஒரு அதிசய உலகத்தில் இருப்பதுபோல் கற்பனை பண்ணவேண்டும். நிஜவாழ்வில் ஒரு போதும் நீங்கள் காணாத காணமுடியாத ஒரு பாத்திரத்தை நீங்கள் ஏற்கவேண்டும். அதற்கு நீங்கள் நிறைய உழைக்கவேண்டும். ஒரு நடனத் தொடர் அல்லது ஒரு ஸ்ரண்ட்காட்சி கடின உழைப்பையும் கடினப் பயிற்சியையும் வேண்டி நிற்கிறது.

உண்மையிலே நட்சத்திரமாக இருப்பதற்கும் நடிகையாக இருப்பதற்கும் வித்தியாசம் இருக்கின்றது. நாங்கள் நட்சத்திரஅந்தஸ்தை அடைவதற்காகவே வியாபாரப் படங்களில் நடிக்கிறோம். ஒரு குறிப்பிட்ட பார்வை யாளர்கள் வியாபாரப் படங்களுக்கென்று இருக்கிறார்கள். அவர்கள் யதார்த்தமில்லாத பாத்திரங்களாக நாங்கள் நடிப்பதைப் பாராட்டு கிறார்கள். ஆனால் கலைப்படங்களில் நாங்கள் நடிப்பதற்கூடாகவே நாம் நடிகை என்ற அந்தஸ்தைப் பெறமுடியும்.

–வளரும்–



படிப்பகம்

www.padippakam.com

# நான் ஜெனிவாவில் _____ அலன் தர்மகுலசிங்கம் (10வயது)-Vejen

அது ஒரு நல்ல நாள். நாங்கள் சுவீஸ் நாட்டில் உள்ள ஐக்கியநாடுகள் சபையைப் பார்வையிடுவதற்காக, உல்லாச பிரயாணிகளாக flensborg எல்லையைத் தாண்டினோம்.

நாங்கள் பிரதானவீதிகள், பெரும்வீதிகள் ஊடாக பயணம் செய்தோம். வழியிலுள்ள பெற்றோல்நிலையங்களில் நிறுத்தி எங்களுக்கு தேவையான உணவுகளை வாங்கினோம். ஒரு இரவும்பகலும் பயணம் செய்து ஜெனிவாவை அடைந்தோம். அப்போது நாங்கள் எல்லா நாடுகளின் கொடிகளையும் பார்க்கமுடிந்தது.

ஐக்கியநாடுகள் சபையை பார்ப்பதற்குரிய கட்டணத்தைச் செலுத்திய பின் முதலில் பணக்கார, வறிய நாடுகள் பற்றிய ஒரு படம் பார்த்தோம். பின்பு கூட்டங்கள் நடைபெறும் மண்டபங்களை பார்வையிட்டோம். எல்லாமாக 22 மண்டபங்கள் இருந்தன. அவை மிகவும் பெரிவையாகவும் ஒவ்வொன்றும் கிட்டத்தட்ட 2000 இருக்கைகளை கொண்டவையாகவும் இருந்தன. இங்கே ஒரு வருடத்தில் 700 கூட்டங்கள் நடைபெறுகின்றன.

ஒருஇடத்தில் யன்னலுக்கு அருகில் ஸ்ரீலங்கா என எழுதப்பட்ட அட்டையைக் கண்டேன். அங்கே நாங்கள் செல்லும் வழிகளில் பல வகையான சிறந்த பொருட்களைக் பார்த்தேன்.

பெரிய மகாநாட்டு மண்டபங்களில் ஒன்றை பார்வையிட்டோம். அவற்றில் ஐக்கியநாடுகள் சபையின் அடையானச்சின்னம் பொறிக்கப் பட்டிருந்தது. பின்பு மிகவும் முக்கியமான மகாநாட்டு மண்டபங்களில் ஒன்றையும் பார்வையிட்டோம். அது எனக்கு சிறிய மண்டபமாக இருந்ததுபோல் தெரிந்தது.

அங்கே கொடிகள் யாவும் ஏற்றப்பட்டிருந்தது. ஐக்கியநாடுகள் சபை ஜெனிவாவில் ஆரம்பிக் கப்பட்ட தினம் என்பதனால் கொடிகள் ஏற்றப் பட்டுள்ளதாக எங்கள் வழிகாட்டி தெரிவித்தார். 1946 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ம் திகதி ஐரோப்பாவில் ஐக்கியநாடுகள் சபை திறந்து வைக்கப்பட்டது.

பின்பு வெளியே உள்ள பூந்தோட்டத்தையும், அழகான குளத்தையும் பார்வையிட்டோம். ஐக்கியநாடுகள் சபை ஆரம்பிப்பதற்கு முன்னர் Revillod என்பவருக்கு இக்கட்டிடம் சொந்தமாக இருந்தது.

இங்கே ஒவ்வொருவருடமும் நடைபெறும் கூட்டங்களிலும் 20,000பேர் பங்கேற்கிறார்கள். இங்கே 200க்கு மேற்பட்ட பத்திரிகையாளர்கள் உள்ளனர்: 3000பேர் வேலை செய்கிறார்கள். ஐக்கியசாடுகள்சபை ஜெனிவாவில் உள்ளதனால் ஐரோப்பாவில் மிகவும் முக்கியமான நகரமாக விளங்குகிறது.

நியூயோர்கிலும் ஒரு ஐக்கியநாடுகள் சபை உண்டு. அது மிகவும் பெரியதாகும்.

ஜெனிவாவில் உள்ள இக்கட்டிடத்தைக் கட்டும்போது 300கட்டிட தொழில்நுட்பவிய லாளர்கள் கடமையாற்றினார்கள்.

□□□□□□□□□□□

**சனம்..!**

சூரியன்
நிலத்தில் விழுந்ததாம் .
செய்தி கேட்டு :
மத்தியான வெயிலில்
சிலர் :
ஒப்பாரி வைத்தனர்.
அவர்களுக்கு
ஆறுதல் சொல்ல :
இன்னும் சிலர்
அவசரமாய் புறப்பட்டனர்.

——— *சன்னதமாடி.*



படிப்பகம்

www.padippakam.com

கரவை தாசன்

## விதி

நீ என்னை நேசிப்பதாகச் சொன்னாய்
நான் உன்னை நேசிக்கிறேன்.
காலம் நம்மைப் பார்த்து சிரிக்கின்றது.

## பரிகாரம்

சீதைகள் மருகிவிட்ட
பரியந்தத்தில்
ராமனுக்கு
நோ
பரிகாரம்

## ஏன்

கண்கள் காதலிக்க
மனங்கள் பேதலிப்பதா?

## தேடலும் விடையும்

ஐந்தும் ஐந்தும் பத்து
இல்லை!
ஐந்தும் நாலும் பத்து
ஐந்தும் நாலும் பத்து என்பது சரி
ஐந்தும் ஐந்தும் பத்து என்பது மிகச்சரி

## நமது நாடு

நமது நாடு கலைகலாச்சார பாலைவனமல்ல
கலைகலாச்சாரப் பூங்காவுமல்ல
நமது நாடு
நாடுதான்

## புரட்சி

கல், பொல்
வாள்
புள்ளடி
சுத்தியலும் அரிவாளும்
புள்ளடியின் பின்னால் ஏவுகணை

ச. ச. முத்து

## நம்பிக்கை

அது என்ன
மெல்லியதாய்......
நூலா......
அதில் சிலந்தியின் நம்பிக்கை
தொங்குகிறது.

இதோ! இந்த மரங்கள்
இலையுதிர் காலத்து மரங்கள்
போன வெயிற் காலத்தில்
எத்தனை பசுமையாய்
இலையும், பூவும், காயுமாய்.....
நானும் கூட சிலநாள்
இதன் நிழலில்
இளைப்பாறினேன்.
ஆனால் இன்று....
காற்றில் அசையும்
இலைகள் ஏதுமின்றி
பசுமையின் ஆரவாரம்
அசைதல் இன்றி....
எதையோ கேட்டு
வானம் நோக்கி
எதைக் கேட்டோ - விரல் நீட்டி
நிற்பதுபோல் - தன்
இலையில்லாக் கிளை
நீட்டி நிற்கிறது.

இன்னும் ஏன் இது
பட்டுப்போய் விடவில்லை.
நம்பிக்கை!
நம்பிக்கை!

அதோ அந்தக்
கருங்கற் பாறைவெடிப்பில்
சின்ன இலைகளும்
சின்னப்பூவும் துளிர்க்கிறது.......
எப்படி இது.......
கருங்கற் பாறையையும்
உடைத்து வெளிவர- இந்தச்
சின்னப்பூவால் முடியுமானால்
உன்னாலும் முடியும்.
நினைப்பதை நடத்திவிட
உன்னாலும் முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

# தோப்புக்கரணங்கள்

முல்லையூரான்

குறுநாவல் - தொடர்

②

"டனிஷா" டென்மார்க்கில் பிறந்துவளர்ந்தவள்.
வயது: 16
தனது குடும்பத்துடன் டென்மார்க்கைவிட்டு அவள் மீண்டும் ஈழத்திற்கு புலம்பெயர்கிறாள்.
அங்கு அவள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றிக்கூறும் ஒரு குறுநாவல் தொடர்.



வைகாசிமாதம் பிறந்துவிட்டது.வெயிலைத்துரத்திக்கொண்டு வந்துநின்று வீசும் சோழகக்காற்றும் ஆரம்பித்துவிட்டது.வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவிற்பொங்கல் ஆரவாரம் ஆரம்பிப்பதற்கு அந்த சோழகக்காற்று வரவேண்டும்.வீட்டுமேச்சல்கள், வளவுதுப்பரவாக்கல் என்று அயலூர் பொங்கல் விருந்தினருக்காக கிராமம் தயார்ப்பட்டுக்கொண்டிருக்கும்.தாடிவளர்த்த சடாமுடிச்சாமியார்கள் கதிர்காம யாத்திரைக்காக புறப்பட்டு வந்து இக்கிராமத்திலேயே தங்கியிருப்பார்கள்.கோயிற்பொங்கலுக்கு முன்னரே போட்டுமுடிக்கப்படவேண்டிய கோவலன்கூத்திற்கு அண்ணாவியார் புதுக்குடியிருப்பிலிருந்து வந்து தங்கியிருக்கும் காலம் இந்த வைகாசி மாதம்.

நெல்லால் நிறைந்தும், புதுச்சைக்கிளில் வலம்வரும் இளைஞர்களுமாக கிராமம் சந்தோசமாக இருக்கும்.அயலூர்ப்பிச்சைக்காரர்கள் வரிசைகட்டிக்கொண்டு வந்துபோவார்கள்.கோடைப்போக சேற்றடிப்புக்கு போய்த்திரும்பும் எருமைமாடுகளும் கால்நிறைந்த சேற்றுடன் வீடேகும் விவசாயி களுமாக ........கிராமம் சந்தோசமாக இருக்கும்.
நிலவோடு நிலவாக "சோறு குடுப்போடு" நடந்துமுடிந்த கல்யாணத்தம்பதிகள் வேட்டி கூறை சரசரக்க கால்மாறித்திரும்பும் காட்சிகளும் இந்த வைகாசி மாதத்திலேதான் அதிகம்.



படிப்பகம்

www.padippakam.com

இந்தச் சோழகக்காற்றோடு வந்து குவியும் பச்சைக்கிளிகள், இருந்தாற்போல் படையெடுத்துக் கலக்கும் வண்ணத்துப்பூச்சிக்கூட்டங்கள், இவை அந்தக் கிராமத்தின் அழகுகள். புழுதியையும் காய்ந்த இலைகுளைகளையும் அள்ளிவீசியபடி சோளகக்காற்று அடித்துக்கொண்டிருந்தது.
பலாப்பழவாசனைதேடி பலாவுக்குப்பலா மாறும் காக்கைகள்.
பலாமரநிழலில் அர்ச்சுனன் பனம் நொங்குக் குலையும் கத்தியுமாக உட்கார்ந்திருந்தான்.
மடித்துக்கட்டப்பட்ட பச்சைக்கோட்டுச் சாரம் அவனது இல்லாத அந்த ஒற்றைக்காலைக்காட்டியபடி மடித்துக்கட்டப்பட்டிருந்தது. அவனது ஊன்றுகோல் பலாவில் சாத்தப்பட்டிருந்தது.
அவன் நுங்கு குடிக்க ஆயத்தமானான்.
திடீரென முற்றத்தில் ஒரு வட்டவடிவ ஒளி தோன்றியது.
அர்ச்சுனன் அதையே பார்த்தான்.
அந்த ஒளி அவனைநோக்கி நகர்ந்து வந்தது. ஆர்வத்துடன் அதையே அர்ச்சுனன் பார்த்தான்.
முன்னோக்கி வந்த அந்த ஒளி தயக்கத்துடன் பின்நோக்கி நகர்ந்தது.
வருகின்ற சூரியக்கதிர் ஒளியை முகம்பார்க்கும் கண்ணாடியால் மறித்து திசைதிருப்பி அத்தகைய ஒளியை ஏற்படுத்துவார்கள். காகக்காவலுக்கும் இத்தகைய கண்ணாடித்தந்திரத்தை பயன்படுத்துவதுண்டு.
அந்த வட்டஒளி மீண்டும் அர்ச்சுனனைநோக்கி நகர்ந்து வந்தது.
நகர்ந்து வந்த அந்த ஒளி அர்ச்சுனனின் மார்பில் மெல்லஏறி நின்றது.
அர்ச்சுனன் அந்த ஒளி நகர்ந்து வந்த திசையை பார்த்தான்.
திண்ணையில் டனிஷா ஒரு வட்டவடிவ முகம்பார்க்கும் கண்ணாடியோடு இருந்தாள்.
அர்ச்சுனனின் பார்வையோடு டனிஷா கண்ணாடி விளையாட்டை நிறுத்தினாள்.
அர்ச்சுனன் மீண்டும் ஒரு நுங்கை கையிலெடுத்துக்கொண்டான்.

இன்று டனிஷாவையும் அர்ச்சுனனையும் தனிமையில் விட்டுவிட்டு பொன்மணி அயல்வீட்டுக்கு கழன்றுவிட்டாள். நவாவும் சுமதியும் ஊரில் இல்லை. வெளிநாடுகளிலிருந்து பாதிக்கப்பட்டு தாயகம்திரும்பியோருக்கான நலவசதிக்கூட்டமொன்றிற்காக யாழ் சென்றிருந்தனர்.
மீண்டும் கண்ணாடியால் ஒளியைக்குவித்து அர்ச்சுனனின் முகத்தில் அடித்துவிளையாடினாள் டனிஷா.
கண்கள்கூசி கோபத்துடன் டனிஷாவைப் பார்த்தான்.
அவள் கலகலவெனச்சிரித்தாள்.
வந்தகோபம் அவனுக்கு சிரிப்பாகியது. டனிஷாவைநோக்கி ஒரு நுங்கை எடுத்துநீட்டினான் அர்ச்சுனன்.
ஓடிச்சென்று வாங்கிக்கொண்டாள் அவள்.
எங்கிருந்தோ வண்ணத்துப்பூச்சிகள்கூட்டமொன்று திரட்டு வந்தது.
ஆச்சரியத்தால் விழித்தாள் டனிஷா.
அவற்றைப்பிடிக்கமுயன்று தோற்றாள் அவள். அவனைப்பிடித்துத்தரும்படி கேட்டாள் டனிஷா.
அவளின்மொழி புரியாது சிரித்தபடி நின்றான் அர்ச்சுனன்.
மேலே பல்நிற வண்ணத்துப்பூச்சிகள். கீழே அவனும் அவளும்.
பொன்மணி படலையைத்திறந்துகொண்டு வந்தாள்.
இந்தக்காட்சி அவளுக்கு சந்தோசமாக இருந்திருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

∴∴

யாருக்கும் சொல்லிக்கொள்ளாமலே டனிஷா புறப்பட்டுவிட்டாள். வந்ததிலிருந்து அவள் அனுபவிக்கும் தனிமையும், புரியாத மொழியும், புதிய சூழலும், இழந்துபோன நட்புகளும் எதிர்காலமற்ற சூனியமும் ஏற்பட்டால் இவ்வாறுதானே வாழ்வு வரும்.

கால்போனபோக்கில் நடந்தாள் அவள்.

புதுக்கடைச்சந்தியில் நின்ற பொடியள் டனிஷாவைக்கண்டதும் எக்களித்துச்சிரித்தது டனிஷாவுக்கு புதிதாக இருந்தது.

அதிலொருவன் விசில் அடித்தான். எல்லோரும் கைதட்டிச்சிரித்தார்கள்.

இப்போது டனிஷாவுக்கு ஆத்திரம் வந்திருக்கவேண்டும்.

பதிலுக்கு தானும் பலத்த ஒரு விசில் அடித்தாள். இளைஞர்கூட்டம் அடங்கிப்போயிற்று.

தொடர்ந்து நடந்தாள் அவள்.

உயர்ந்தும் அகன்றும் நிலத்தைஆட்சிசெய்தபடி அந்தப்பனிச்சைமரம் நின்றது. அந்தமரத்தின்கீழ் காய்ந்தஇலைகளை விலக்கிவிலக்கி அந்தக்கிழவி ஆர்வத்தோடு எதையோ தேடிக்கொண்டிருந்தாள். அழுக்கான கிழிந்த சேலையுடன் அவள் அழுதபடியே தேடிக்கொண்டிருந்தாள்.

அவளது பெருமளவு தலைமுடிகள் கொட்டிக்கொண்டுவிட்டிருந்தது. அழுக்குப்படிந்து தலை வெடிப்புவெடிப்பாக ஆகியிருந்தது.முகத்தில் சோகமும் பயமும் கலந்த இறுக்கம் நிறைந்திருந்தது.பற்கள் நிமிர்ந்து சரிந்துபோய் காவிபடிந்து கிடந்தது.

கண்ணீர் ஓடிய தழும்புகள் உப்பேறித்தெரிந்தன. மேலும்மேலும் கண்ணீர் பெருகியது.

இவளுடையபெயர் கூழைக்கிழவி. ஒருமனநோயாளி.பராமரிப்பற்றவள்.வீடு புலம் எதுவுமே இல்லாதவள். கோயில் மண்டபமும் மரத்தடிகளுமே அவள் வாழ்விடங்கள்.

கூழைக்கிழவியை உற்றுப்பார்த்தாள் டனிஷா.கிழவி அவளைக்கண்டதாகவே தெரியவில்லை.

"பிச்சை........பிச்சை...........பிச்சை........." என்றபடியே மணலைக் கிண்டிக்கொண்டிருந்தாள் அவள்.

பிச்சை அவளுடைய கணவன். அவன் ஒரு மலையகத்தமிழன். இலங்கைப்பிரசாஉரிமை அற்றவன்.

தொழில்தேடி வற்றாப்பளைக்கு வந்த இடத்தில் கூழையைச்சந்தித்து காதல்திருமணம் செய்து கொண்டவன். ஒருநாள் பொலீசார் வந்து அவனைப்பிடித்து நாடு கடத்திவிட்டனர்.

காரணம்; இலங்கை இந்திய ஒப்பந்தப்படி பிரசாஉரிமை இல்லாததால் பிச்சையும் நாடுகடத்தப்பட்டான். அன்றிலிருந்து தனித்துப்போன கூழை "பிச்சை"யைத்தேடுவதில் பைத்தியமானாள். இது எங்கே டனிஷாவுக்கு புரியப்போகிறது.மேலும் குழம்பிப்போனாள் டனிஷா.தொடர்ந்து நடந்தாள் அவள்.

அது நந்திக்கடற்கரை. அந்தச்சுகமானகாற்று நன்றாக இருந்தது. புற்தரையில் உட்கார்ந்துகொண்டாள்.வற்றாப்பளை அம்மன்கோவில் கோபுர உச்சி அழகாகத்தெரிந்தது.அரை குறையாக வற்றிப்போய் நந்திக்கடல் இருந்தது. கடல்வெளியைத்தாண்டி தெரிந்தது முல்லைத்தீவு. அதைநோக்கிப்போகும் பேரூந்து ஒன்று விளையாட்டுக்காரளவில் தெரிந்தது.

உயர்த்திக்கட்டிய சாரத்தோடு கையில் தடிஒன்றுடன் வற்றுத்தண்ணீரில் நண்டுபிடித்துக்கொண்டிருந்தான் ஒருவன்.

டனிஷா தான் அணிந்திருந்த காற்சட்டைப்பின்பொக்கற்றிலிருந்து தனது பர்சை எடுத்து விரித்தாள் .முகப்பில் ஒரு புகைப்படத்தில் வெள்ளைக்கார இளைஞன் ஒருவன் சிரித்துக்கொண்டிருந்தான். டனிஷா இப்போது அழுகிறாள்.

(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

காகம்

## அடுத்தஇதழில்

H.C.Andersen கதை

ஆதவனின்பார்வையில் சினிமா

நிகழ்வு – சிறுகதை

மனதோடு பேசுதல் – கவிதை

மலர்தல் வாடல் தெரிதல் – அனுபவம்

தோப்புக்கரணங்கள் – குறுநாவல்

தாய்மொழி....தமிழா? – கட்டுரை

தமிழின்நிலை

பிரச்சனை......"கூட்டுக்குடும்பம்"

இளைஞர்பக்கம்

அறியாமை இருள் – கட்டுரை

மண்ணுக்குள் நினைவுகள் – கவிதை

மற்றும் பல........................................

உங்கள் படைப்புக்கள், அபிப்பிராயங்களை எழுதி அனுப்புங்கள்; எல்லோரும் வளர...காகம்

# காகம்

*முற்றமெல்லாம் புழுங்கல் – அதனால்*
*எம் நெஞ்சமெல்லாம் ஆர்முற்றார்.*

*– ஒரு தாய்*

"இது ஒரு தமிழ் மாசிகை"
ஏடு இல: 2 – மாசி. 95
வெளியீடு: ரூலி பப்ளிக்கேசன்
Baunehøjen 35
3320 Skævinge
Denmark
Tlf: 42 28 90 12

விலை: ஒரு வருடம்
( 12 இதழ்கள் ) – 200 டனிஸ்குரோன்கள்
வெளிநாடுகள்: 50 U$
கட்டணம் செலுத்தவேண்டிய
வங்கி:
Tuli Publikation
Den Danske Bank
Hillerød Afdeling, Slotsgade 16-18
Postboks 255
3400 Hillerød Denmark
A/C NO : 35 43 - 38 69 87
அல்லது
Post Giro : 94 73 65 3

ஆசிரியர்: முல்லையூரான்
வடிவமைப்பு: ரூலிபதிப்பகம், ரவி
அட்டைப்படம் : சி.உதயன்

சஞ்சிகையில் இடம்பெறும் ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே முழுப்பொறுப்பாளிகளாவர். காகத்தின் எண்ணங்களை படைப்பாளிகள் பிரதி[redacted]க்கவேண்டுமென்பதில்லை.

........................காகம்........................



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

"Postbesørget blad, (0900 KHC) " -51033

Til: Chanchive
Danmarksgade 10
7500 Holstebro

Afs: Tuli Publication Baunehøjen 35, 3320 Skævinge, Denmark

படிப்பகம்